Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 01 செவ்வாய்க்கிழமை (16-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:20



சிறுவனாக விளையாடி... இளைஞனாக வளர்ந்து... திருமணம் முடித்து... ஈராக்கின் அதிபராகி... கைதியாகிய சதாம்.

# எனது மக்கள் உங்களிடம் அடிமைகளாக இருப்பது குறித்து நான் வருந்துகின்றேன்!

## விசாரணையின்போது சதாம் தெரிவிப்பு

கைது செய்யப்பட்ட ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஈராக்கில் உள்ள இரகசிய இடம் ஒன்றில் அடைக்கப்பட்டுள்ளார். அவரிடம் முதற்கட்ட விசாரணைகள் நடந்துமுடிந்தன. ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தளபதி ரிக்கார்டோ சான்செஸ் தலைமையிலான புலனாய்வு அதிகாரிகள் அவரிடம் துருவித்துருவி விசாரணை நடத்தினர். பெரும்பாலான கேள்விகளுக்கு நேரடியாக எந்தப் பதிலையும் முதலில் கூற மறுத்த சதாம் ஹுசைன், பின்னர் சகஜமாகப் பேசினார் என்று விசாரணை நடத்திய அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார்.

பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள ஒரு தனி அறையில் அவரிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், இதனை அமெரிக்கப் படை உறுதிப்படுத்தவில்லை. அவர் எங்கு அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்தும் அமெரிக்கா எதனையும் தெரிவிக்கவில்லை. அவர் ஈராக்கிலிருந்து வேறொரு நாட்டிற்கு நாடுகடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பிறிதொரு தகவல் தெரிவிக்கிறது.

**பேரழிவு ஆயுதம் இல்லை**

கைது செய்யப்பட்ட சதாமிடம் என்

(03ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி - பிரதமர் இடையேயான சமரச முயற்சிக்குக் காலக்கெடு நீடிப்பு



## அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் நேற்றும் தோல்வியில் முடிந்ததால்



கொழும்பு, டிசெம்பர் 16

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்ப்பதற்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற இரு தலைவர்களினதும் அதிகாரிகள் மட்டப் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனையடுத்தே சமரச முயற்சிக்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது.**

சமாதானம், தேச உட்கட்டமைப்பு, மக்களின் நலன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இடம்பெற்று வந்த பேச்சுக்களின் அடுத்த சுற்று பெரும்பாலும் அடுத்த மாதமளவிலேயே இடம்பெறும் எனத் தெரிய வருகிறது.

இரு தலைவர்களினதும் அதிகாரிகள் மட்டப்பேச்சுக்கள் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் முடிவடையவேண்டும் என்று முன்னர் காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஜனாதிபதி முன்வைத்த ஆலோசனைகளின்படி, சகல கட்சிகளின் பங்குபற்றலுடன் கூடிய தேசிய நல்லிணக்க மீள் நிர்மாண அரசு ஒன்றை பிரதமரின் இணைக்கப்பாட்டுடன் அமைப்பது தொடர்பாக மலிக் - தித்தவல குழு நேற்றும் கூடிப் பேசியது. ஆனால், சந்திப்பில் இம்முறையும் முன்னேற்றகரமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

ஜனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுக்களுக்குரிய காலக்கெடுவை ஒத்திவைப்பதாக மட்டும் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அறியவருகிறது.

சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் தெரிவிக்கையில்:-

சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை எடுக்கவேண்டிய தருணத்தில், அது குறித்து வர்த்தமானி அறி

(12ஆம் பக்கம் பார்க்க)

# திருக்கோவில் வைத்தியசாலையிலுள்ள படைமுகாம் ஜனவரியில் இடம்மாறும்

## புலிகள் - அதிரடிப்படை கலந்துரையாடலில் இணக்கம்

அக்கரைப்பற்று,டிசெ.16

மக்கள் நிம்மதியுடனும், அச்சமின்றியும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தி அவர்கள் தமது அன்றாடத் தேவைகளைப்பெற்று சந்தோஷமாக வாழ வழி சமைப்பதே இன்றைய தேவையாகவுள்ளது. அதில் எமது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார்.

நேற்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் விசேட அதிரடிப்படை மற்றும் பொலீஸாருக்கும் இடையிலான புரிந்துணர்வுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட தலைவர் நீஸ்டோ குஜானா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் பாவா, அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மாவட்ட முன்மாரி கோட்டப் பொறுப்பாளர் கதா, அம்பாறை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாதுகாப்புத்துறை சார்பில் விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் உபுல்செனவிரத்ன, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என்.விஜேவிக்கிரம, விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த திருக்கோவில் முகாம்பொறுப்பதிகாரி ஆர்.ஏ.ஏ.கேரட்நாயக்க, அக்கரைப்பற்று முகாம் பொறுப்பதிகாரி ஏ.கே.எம். அமரசிங்க, கஞ்சிகுடிச்சாறு காஞ்சிரங்குடா பொறுப்பதிகாரிகள், அக்கரைப்பற்று, பொத்துவில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளான ரீ.எம்.ஐ.எம்.புகாரி, ஏ.ஏ.வாஹிட் ஆகியோர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு.சதாம் கிராமம் கவலை!

கொழும்பு, டிசெ.16

மட்டக்களப்பில் உள்ள சதாம் ஹுசைன் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சதாமின் கைது தொடர்பாக கவலை தெரிவித்தனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இக்கிராமம் 1989ஆம் ஆண்டு ஈராக் அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டது. அதனால் 'சதாம் ஹுசைன் கிராமம்' என்று பெயரிடப்பட்டது.

"சதாம் மனிதாபிமானம் மிக்கவர், அமெரிக்காவின் உச்சக்கட்ட எதேச்சாதிகாரமே இக்கைது. சதாம் விடுதலை செய்யப்பட வேண்டும்" என்று இந்தக் கிராம மக்கள் வெளிநாட்டு செய்திச்சேவை ஒன்றிடம் தெரிவித்துள்ளனர்.(ஓ-9)

# மருத்துவபீட மாணவர்களால் துணைவேந்தர் கார் முற்றுகை!

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்றுமாலை துணைவேந்தரின் காரை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தடைப்பட்டுள்ள தமது கற்றல் செயற்பாடுகள் தொடர உடனடியாக வழி செய்யுமாறு கோரியே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

மருத்துவபீட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தொடர்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து ஆராய்வதற்கான கூட்டமொன்று மருத்துவபீடத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் துணைவேந்தர், பேராசிரியர் சு.மோகனதாஸ், மருத்துவபீடப் பதில் பீடாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகன், மருத்துவபீட அவை உறுப்பினர்கள்,மாண

(12ஆம் பக்கம் பார்க்க)

# மிதிவெடியிலிருந்து தப்பிய நபர் அதே இடத்தில் மீண்டும் சிக்கினார்!

## சாவகச்சேரியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

மிதிவெடியில் இருந்து மயிரிழையில் தப்பிய நபர் அதே இடத்தில் மீண்டும் சிக்கி படுகாயமடைந்தார். சாவகச்சேரியில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த க. அருணாசலம் (வயது 68) என்பவரே மிதிவெடியில் சிக்கிக் காலொன்றை இழந்தவராவார்.

இப்பகுதியில் செ.சிவஞானம் என்பவருக்குச் சொந்தமான காணியில் குடும்பம் ஒன்று குடியிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் அக்குடும்பம் அங்கிருந்து வெளியேறியது. கடந்த சனிக்கிழமை அக்காணியில் துப்புரவுப் பணிமேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பணியில் அருணாசலம் ஈடுபட்டார். அப்போது அவர் அங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளத்தில் நேற்று அதிகாலை வர்த்தகர் மீது துப்பாக்கிச் சூடு!

கொழும்பு,டிசெ.16

புத்தளத்தில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் ஒருவர் காயமடைந்து புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அப்துல் அசீஸ் அப்துல் கபூர் (60) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு நகரத்துக்குச் சற்று அப்பாலுள்ள தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே அவர் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. புத்தளம் பொலீஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சுகாதார ஊழியர் போராட்டத்தால் யாழ். ஆஸ்பத்திரியில் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

சம்பளப் பிரச்சினையை முன் வைத்து சுகாதார ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ். போதனாவைத்தியசாலையில் சிற்றூழியர்களில் பெரும்பாலானோர் சுகயீனலீவுப் போராட்டம் ஒன்றை நடத்தினர்

இதனால் போதனாவைத்தியசாலையின் சில வார்ட்டுகளில் பணிகள் சீர்குலைந்தன

சத்திரசிகிச்சைப்பணிகளும் மிகுந்த தாமத நிலையிலேயே நடைபெற்றன.

இதேசமயம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையைச்சேர்ந்த இளைஞர், யுவதிகள், போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்குப் பதிலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

- இதேவேளை, அரசாங்க வைத்தியசாலைகளில் சுகாதார சேவை ஊழியர்கள் நேற்றுக்காலை சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு எதிரே ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தத்தினால் தேசிய மட்ட வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இவ்வேலை நிறுத்தத்தினால் வெளியூர் வைத்தியசாலைகளே பெரிதும் பாதிக்கப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சுகாதார சேவை ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தினால் வைத்தியசாலைப் பணிகள் பெரிதும் பாதிப்படைந்தன.

போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்திருந்த நூற்றுக் கணக்கான நோயாளர்கள் நீண்ட நேரம் காத்துக் கிடந்துவிட்டுத் திரும்பிச் சென்றனர். மருந்து வழங்கும் பிரிவு, முக்கிய 'கிளினிக்'குகள் உட்பட வைத்திய சாலையின் பெரும்பாலான பணிகள் பாதிப்படைந்தன.

(ஒ-15-139)

## ஆசிரியர் கருத்தரங்கு திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

குடாநாட்டில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால நடத்தப்படவிருந்த கருத்தரங்கு இடம்பெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்படி யாழ்ப்பாணம், தீவகம் கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதியும்- தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதியும் -

வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 22ஆம் திகதியும் -

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 23ஆம்திகதியும் இக்கருத்தரங்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த பாடசாலைகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-4)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ். மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தின் ஆதரவுடன இந்த வருடம் வெளி மாவட்டங்களில் இடம்பெற்ற ஆட்டங்களில் பங்கு பற்றிய வீரர்களுக்கான சான்றிதழ்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட 16,19 வயதுப் பிரிவுகளின் வீரர்களையும், வவுனியா சென்ற யாழ் மாவட்ட கிரிக்கெட் அணி வீரர்களையும், தமக்குரிய சான்றிதழ்களை இல. 253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் அருண் ஸ்போட்ஸ் ஸ்டோர் இல் பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணிவரை நேரில் வந்து பெற்றுக் கொள்ளும்படி யாழ.மாவட்டத் துடுப்பாட்ட சங்கச் செயலாளர் எஸ்.விமலதாஸன் கேட்டுள்ளார். (ஒ-5)

## கலந்துரையாடல்கள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ள வருடாந்த விளையாட்டு விழா, விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி வழங்கல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன.

பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பதில் விளையாட்டு அதிகாரி செ.மகிந்தன் கேட்டுள்ளார்.(ஒ-5,86)

★ ★ ★

புதிய மாணவர்களைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதில் இடம்பெற்ற பாதிப்புகள் குறித்து ஆராயவதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இக்கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## ஒளிவிழா

வலிகாமம் கல்வி வலய நலன்புரிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள ஒளிவிழா நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் - இடைக்காலத்தில் யூனியன் கல்லூரி இயங்கிய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

நலன்புரிக் கழகத் தலைவர் இதயராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் அருட்தந்தை அன்ரன்பிள்ளை ஆசியுரை வழங்குவார். (ஏ-152)

# கிணற்றில் வீழ்ந்த பெண் பரிதாபமாக உயிரிழப்பு!

## மானிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

கிணற்றில் வீழ்ந்த குடும்பப் பெண் பரிதாபமாக உயிரிழந்தார்.

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த அஜித்குமார் பாமினி (வயது-27) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தவராவார். இவருக்கு ஒன்றரை வயதில் குழந்தை ஒன்று உள்ளது.

அயலவர் வீட்டில் தனது குழந்தையைக் கொடுத்துவிட்டு தனது வீட்டுக் கிணற்றில் இவர் குளிக்கச் சென்றதாகவும் -

அவரது கணவர் மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்தபோது மனைவியைக் காணவில்லை என்று தேடி அயலவர்களிடம் விசாரித்தார் என்றும் -

அதனைத் தொடர்ந்து கிணற்றுக்குள் பார்த்த போது அப்பெண் சடலமாகக் கிடந்தமை தெரியவந்ததாகவும் - கூறப்படுகிறது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டது.

(ஒ-6-15)

# மோட்டார் குண்டு வெடித்து எட்டு வயதுச் சிறுவன் பலி!

## தந்தை, பாட்டி, சகோதரன் படுகாயம்

கொழும்பு,டிசெ.16

அநுராதபுரம், சாலியபுர இராணுவ முகாம் சூட்டுப்பயிற்சி மைதானத்துக்கு அப்பாலுள்ள தெப்பங்குளம் என்னும் இடத்தில் நேற்றுமுன்தினம் மோட்டார் குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு சிறுவன் பலியானான். அச்சிறுவனின் தந்தை உட்பட மூவர் காயமடைந்தனர்.

பழைய இரும்பு விற்பவரான ஒருவர் இரும்பு என நினைத்து வீட்டுக்கு எடுத்து வந்த மோட்டார் குண்டை அடித்து நொறுக்க முற்பட்டபோது அது வெடித்துள்ளது. கே.விஜேசிங்க (40-வயது) என்னும் இந்நபரின் எட்டு வயதான மகன் சரத் குண்டு வெடிப்பில் பலியானார்.

விஜேசிங்க அவரது தாயாரான எம்.ஏ.பியவதி (65-வயது), சிறுவனின் சகோதரன் சுதத் (16-வயது) ஆகியோர் படுகாயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற வீட்டிலிருந்து அருள் 81 ரக மோட்டார் குண்டுகள் 35, ஆர்.பி.ஜி மோட்டார் குண்டுகள் 17 ஆகியவை பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டன. பின்னர் அவை செயலிழக்கச் செய்யப்பட்டன.

சாலியபுர இராணுவமுகாமிலிருந்து ஒதுக்கித் தள்ளப்பட்டவை எனக் கூறப்படும் இக்குண்டுகளை மேற்படி நபர் சேகரித்து வீட்டுக்கு எடுத்து வந்திருக்கிறார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

# கோதுமை மாவுக்கான தீர்வை அதிகரிப்பு

விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் அறிவித்திருக்கும் தீர்வைக் குறைப்புக்கான பொருள்களின் பட்டியலில் -

நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள தீர்வை மாற்றங்களில் கோதுமை மாவுக்கான தீர்வை 5.0 வீதத்தில் இருந்து 7.0 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தீர்வை மாற்றங்கள் தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியான பொருள்களின் பட்டியலில் மாவுக்கான தீர்வை மாற்றம் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதனை கவனத்தில் கொள்ளுமாறு நிதித்துறையினர் கேட்டுள்ளனர். (ஐ)

# சங்கரிக்கு எதிரான தீர்மானத்துக்கு திருகோணமலைக் கிளை வரவேற்பு

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு எதிராகச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை நேற்றுமுன தினம் வரவேற்று அங்கீகரித்துள்ளது.

இந்தக் கூட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்றது.

"மத்திய குழுவுக்குப் பிரதிநிதிகளாகச் செல்வோர் கூட்டணியின் திருகோணமலை மாவட்டக் கிளையினால் எந்த விடயம் தொடர்பாகவும் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைவாகவே கருத்துக்களை அங்கு முன்வைக்க வேண்டும். இதற்குமாறாக மத்திய குழுவில் முன்வைக்கப்படும் சகல கருத்துக்களையும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். நிராகரிக்கவும் வேண்டும். திருகோணமலைக் கிளையினால் 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் ஏனைய அனைத்து முடிவுகளும் சுயமாகவே மேற்கொள்ளப்பட்டவை" - இவ்வாறு தெரிவிக்கும் பிரேரணைகள் மாவட்டக் கிளைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (ஐ)

# சதாம் கைதான பின்னரும் ஈராக்கில் குண்டு வெடிப்பு!

ஈராக் தலைநகர் பக்தாத்திலுள்ள ஈராக்கியப் பொலிஸ் நிலையம் மீது நேற்று மீண்டும் குண்டுத்தாக்குதல் நடந்தது. இதில், பத்துப் பொலிஸார் கொல்லப்பட்டனர். மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

பக்தாத்திலுள்ள அமிரியா நகரிலேயே நேற்று அதிகாலை இத்தாக்குதல் நடந்தது. அப்போது ஈராக்கியப் பொலிஸாரே அந்த கடமையில் இருந்தனர். கார் ஒன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரியே மேற்படி தாக்குதலை நடத்தினார். காரில் வந்த குண்டுதாரி பொலிஸ் நிலைய வாயிலில் இருந்த கதவை காரால் மோதித் தகர்த்து அங்கிருந்த கட்டடம் மீது அதனை மோதினார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பக்தாத் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தில் அமெரிக்கப் படையினர் தேடுதல் நடத்தினர். எனினும், எவரும் கைது செய்யப்படவில்லை.

சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் நடந்த முதலாவது தற்கொலைத்தாக்குதல் இதுவாகும்.

அமெரிக்கப்படைக்கு எதிரான தாக்குதல்கள் அங்கு தொடரும் என்பதால் அமெரிக்கப்படை அங்கு தொடர்ந்து தங்கியிருக்கும் என்று பென்டகன் அறிவித்துள்ளது. ஆனால், எவ்வளவு காலத்திற்கு அமெரிக்கப்படை அங்கு தங்கியிருக்கும் என்பது குறித்தோ அல்லது எப்போது அங்கிருந்து வெளியேறும் என்பது குறித்தோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# வடக்கு-கிழக்கு சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு 200 கோடி ரூபா

கொழும்பு,டிசெ.16

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்திப் பணிகளுக்காக 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உலக வங்கி 'யுனிசெவ்' மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் மேலும் பல சமூக அபிவிருத்தித் திட்டங்களும் அங்கு நடைமுறைப்படுத்தப்படும். இதற்கெனத் தனியான திட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சுகாதார நலன் நோம்பல், சமூக சேவைகள் அமைச்சுகள் தொடர்பான விவாதத்திற்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அண்மைக் காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுத்தி வருகின்றோம். வடக்கு - கிழக்கை அபிவிருத்தி நடவடிக்கைகளில் புறக்கணிக்கின்றோம் என்பதை ஏற்க முடியாது. கடந்த சில மாதங்களுக்கு முன் சுகாதார அமைச்சின் மூலம் வடக்கிற்கு 27 அம்புலன்ஸ்களும் கிழக்கிற்கு 28 அம்புலன்ஸ்களும் வழங்கியுள்ளோம்.

நாட்டின் பல பகுதிகளிலும் சுகாதாரப் பணிகளை விருத்திசெய்யும் நோக்கில் தேசிய சுகாதாரக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை அமுல்படுத்துவது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட சகல மாகாணசபைகளுடனும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கலந்துரையாடல்களை நடத்தி, அப்பிரதேசங்களின் தேவைகளை அறிந்து செயல்படுகின்றோம்.

இப்போது சுகாதார சேவை ஊழியர்கள் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துகின்றனர். இது அரசியல் பின்னணியில் நடத்தப்படும் ஒரு போராட்டம்.

ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப அவர்களின் சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. ஆனால், சம்பள நிலுவைகளை ஒரே தடவையில் வழங்க முடியாமல் இருக்கின்றது இது சுகாதார அமைச்சின் பொறுப்பு அல்ல. திறைசேரியின் கைகளில் தங்கி இருக்கின்றது. இதனை ஊழியர்களும் நன்கு அறிவர். - இப்படி அவர் கூறினார்.

இதேவேளை, சுகாதார சேவைகளை அரச தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்போவதாக எதிர்க்கட்சியினர் பிரசாரப்படுத்துகின்றனர். இதில் எந்த உண்மையும் இல்லை. இது எதிர்க்கட்சியினரின் ஒரு கற்பனைக் கதை என்றும் அமைச்சர் பதில் அளித்தார். (ஏ)

## விசர்நாய் கடித்த நபர் தடுப்பூசி ஏற்றாததால் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்,டிசெ.16

மூன்று மாதங்களுக்குமுன்னர் விசர்நாயின் கடிக்கு இலக்கானவர், அப்போது தடுப்பூசி மருந்தை ஏற்றத்தவறினார். இதனால் அவர் நேற்றுமுன் தினம் மரணமானார்.

விசர்நாய் கடித்த பின்னர் இவருக்குக் கடந்த 11ஆம் திகதி திடீரென காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் ஏற்பட்டன. அதனையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். ஆயினும், சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு அவர் உயிரிழந்தார்.

சில்லாலை, கதிரை மாதா கோவிலடியைச் சேர்ந்த தம்பு ஐங்கரன் (வயது-48) என்பவரே இறந்தவராவார்.

நேற்று இடம்பெற்ற மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-15)

# வைகோ நாடாளுமன்றம் செல்ல சென்னை மேல் நீதிமன்றம் அனுமதி

மதிமுக பொதுச்செயலர் வைகோ இன்று இந்திய நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள பயங்கரவாதத் தடைச்சட்ட (பொடா) திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்கு சென்னை மேல்நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொடா சட்டத்தின்கீழ் வைகோ கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நாள் முதல், நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி கேட்காத வைகோ இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள பூந்தமல்லி 'பொடா' நீதிமன்றிடம் கடந்த வாரம் அனுமதிகேட்டிருந்தார்.

அவரது மனு அங்கு நிராகரிக்கப்பட, சென்னை மேல் நீதிமன்றில் அவர் மேன்முறையீடு செய்தார். அந்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

தீர்ப்பில் டில்லி செல்லும் வைகோ, தனக்கு எதிரான 'பொடா' வழக்குத் தொடர்பாக நாடாளுமன்றில் எதுவும் அங்கு பேசக் கூடாது என்றும் -

டில்லி செல்லும்போதும், அங்கிருந்து வரும்போதும் இடையில் செய்தியாளர்களுடன் வைகோ பேசக்கூடாது என்றும் - அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

மதுரையிலிருந்து விமானத்தில் கொண்டுசெல்லும் வைகோவை, டில்லியில் தமிழ்நாடு ஓய்வு விடுதியில் தங்கவைத்து, பின்னர், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கும்படியும் - இன்று பொடா சட்டத்திருத்த வரைவு மீதான வாக்கெடுப்பு நடைபெறாவிடின் இன்று மாலையே வைகோ தமிழ்நாட்டுக்கு அழைத்துவரப்பட வேண்டும். வாக்கெடுப்பு நடைபெறும் நாள்வரை அங்கு தங்க அவர் அனுமதிக்கப்படமாட்டார் என்றும் -

சிறை அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# என் மக்கள் உங்களிடம் அடிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னென்ன கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கு சதாம் என்ன பதில்களைக் கூறினார் என்ற தகவலை அமெரிக்காவின் 'ரைம்', 'நியூஸ் வீக்' பத்திரிகைகள வெளியிட்டுள்ளன.

அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள அவரிடம் -" பேரழிவு ஆயுதங்களை எங்கு மறைத்து வைத்திருக்கிறீர்கள்"? என்று கேட்டனர். அதற்கு சதாம்- "எங்களிடம் பேரழிவு ஆயுதம் எதுவுமில்லை. ஈராக் மீது போர் தொடுக்க வேண்டும் என்பதற்காகவே, ஆயுதம் இருப்பதாகக் கனவு கண்ட அமெரிக்கா சண்டையை ஆரம்பித்தது"- என்று தெரிவித்தார்.

"உங்களிடம் பேரழிவு ஆயுதம் இல்லையென்றால், ஐ.நா. அணு ஆயுதப் பரிசோதகர்களை ஏன் ஈராக்கின் முக்கிய பகுதிகளில் சோதனையிட அனுமதிக்கவில்லை"?- என்று அவரிடம் கேட்கப்பட்ட மற்றொரு கேள்விக்கு அவர் -"ஜனாதிபதி மாளிகைக்குள் பிறரை அனுமதிக்க நாங்கள் விரும்பவில்லை. எங்கள் தனிமைக்கு அது இடையூறாக இருக்கும் என்பதால் யாரையும் அனுமதிக்கவில்லை"- என்றார்.

"பிடிபட்டதால் வருத்தமா?" என்ற கேள்விக்கு-" என் மக்கள் உங்களிடம் அடிமைப்பட்டுக்கிடப்பதால் வருத்தப்படுகிறேன்"- என்றார்.

அதேபோல் குடிக்கத் தண்ணீர் கொடுத்தபோது - "இதைக் குடித்தால் நான் 'பாத்ரூம்' செல்லவேண்டும். என மக்கள் உங்களிடம் அடிமையாகக் கிடக்கும் போது நான் மட்டும் எப்படி உங்கள் பாத்ரூமை பயன்படுத்தமுடியும்" - என்றார்.

புலனாய்வு அதிகாரிகளின் சில கேள்விகளுக்கு மட்டுமே பதிலளித்த சதாம், விசாரணைக்குப் போதுமான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### 600 பேர் கொண்ட இரகசியப்படை

போருக்குப்பின்னர் தலைமறைவான சதாம், மறைந்திருந்து தாக்குதல் வியூகங்களை வகுக்கிறார் என்று கூறிய அமெரிக்கப்படை அவரைக் கைதுசெய்வதற்குப் பல முயற்சிகள் மேற்கொண்டபோதும் அவை புஷ்வாணமாகின. அமெரிக்கக் கூட்டுப்படைக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்தவேளையில்,சதாமைக் கண்டுபிடிக்கவென 600பேர் கொண்ட புலனாய்வு இரகசியப் படையணி நியமிக்கப்பட்டது.

ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் அந்தப் படையணி தொடர்ந்து தேடுதல் நடத்தியது. சதாம் ஹுசைனின் விரோதிகளுடன் கூட்டுச் சேர்ந்த அந்தப் படையணியினர் சதாமைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சியில் இறங்கினர்.

சதாமைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு 2.5 கோடி டொலர் பரிசு தரப்படும் என்றும் அமெரிக்கா அறிவித்தது.

### குடும்பத்தவரே காட்டிக்கொடுத்தனர்

ஈராக் போரின் பின் இதுவரை காலமும் - எட்டு மாதங்கள்-தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த சதாம் ஹுசைனை அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே காட்டிக்கொடுத்தனர் என்று அமெரிக்கப்படை தெரிவித்துள்ளது.

சதாமின் மறைவிடம் எங்கிருக்கிறது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருந்த அமெரிக்கப்படை, கடந்த பத்து நாள்களாக சதாமின் குடும்பத்தைச் சேர்ந்த நெருங்கிய உறவினர்கள் பத்து பேரிடம் துருவித் துருவி விசாரித்து வந்தனர். அவர்களில் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே சதாம மறைந்திருந்த பாதாள அறை கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்கப்படை கூறுகிறது.

அமெரிக்க தரைப்படையின் நான்காவது பிரிவின் தளபதியான ஓடிர்னோ இது குறித்துக் கூறுகையில் -

"சதாமின் நெருங்கியவர்களிடம் தீவிர விசாரணை நடத்தினோம். அவர்களில் ஒருவர் கூறிய தகவலை வைத்து சதாமின் மறைவிடத்தைக் கண்டுபிடித்தோம். அதன் பின்னரே சதாம் இருக்கும் இடத்தைச் சுற்றி வளைத்து அவரைப் பிடித்தோம்"- என்றார்.

### சதாமின் பதுங்கு குழி

சதாமின் உறவினர் ஒருவர் கூறிய தகவலையும் புலனாய்வுப் படையினர் தெரிவித்த தகவல்களையும் அடிப்படையாக வைத்து அமெரிக்கப்படையினர் 600பேர் கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் (ஈராக்கிய நேரம்) சதாம் பதுங்கியிருந்த பதுங்கு குழியைக்கண்டுபிடித்தனர்.

சதாமின் சொந்த நகரான திக்ரித்திலிருந்து சுமார் பதினைந்து கிலோமீற்றர் தூரத்திலுள்ள அத்வார் என்ற இடத்திலேயே இந்தக் குழி அமைந்திருந்தது.

அங்குள்ள வேறொரு இடத்திலேயே அமெரிக்கப்படை முதலில் தேடுதல் நடத்தியது. ஆனால், அங்கு சதாம் இருக்கவில்லை. அதன்பின்னரே மேற்படி குழி கண்டுபிடிக்கப்பட்டது.

ஆறு அடி ஆழமும் எட்டு அடி அகலமும் உடையதான இந்தக் குழி இலகுவில் கண்ணிற்குத் தெரியாத வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அதனுள் ஒருவர் மட்டுமே இருக்கமுடியும். சிலந்தி வலை வடிவில் அந்தக் குழி உட்புறமாக வளைந்து காணப்பட்டது. அதற்குள் ஒரு மின் விசிறியையும் சதாம் வைத்திருந்தார்.

தாக்குதலில் இருந்து தப்பிக்கும் வகையில் அடுக்கடுக்காக தடைகள் வைக்கப்பட்டிருந்த அந்தக் குழிக்குள அமெரிக்கப்படையினர் நுழைந்தனர். அங்கு தனது இரண்டு சகாக்களுடன் மிகவும் களைப்படைந்த நிலையில் இருந்த சதாமை எந்தவித எதிர்ப்பும் இன்றி படையினர் கைது செய்தனர்.

அமெரிக்கப் படையின் உயர் அதிகாரிகள் அவரை ஹெலிகொப்டரில் இரகசிய இடம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றனர்.

### ஏ.கே.47 ரக துப்பாக்கிகளும் பணமும் சிக்கின

சதாம் கைது செய்யப்பட்ட போது அவரிடமிருந்து ஏ.கே.47ரக இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டும், பிஸ்டல் ஒன்றும், 7 லட்சத்து 50ஆயிரம் அமெரிக்க டொலர் பணமும் மீட்கப்பட்டன.

பதுங்கு குழியில் இருந்த சதாமை அதற்குள் இருந்த மண்ணைத் தோண்டியே அமெரிக்கப்படையினர் மீட்டனர் என்று செய்திகள் கூறுகின்றன. நீண்ட தாடி, பரட்டைத் தலை, அழுக்கடைந்த நிலையில் இருந்த அவரை முதலில் குர்திஷ் படையினரே அடையாளங் காட்டினர்.

சதாமின் புதல்வர்களைக் கொல்வதற்கு கடுமையான துப்பாக்கிச சண்டை நடந்தது. ஆனால், சதாமைக் கைது செய்வதற்கு ஒரு துப்பாக்கிக் குண்டேனும் பயன்படுத்தப்படவில்லை என்று அமெரிக்கப்படை மகிழ்ச்சியுடன் தெரிவித்தது.

சதாம் கைது செய்யப்பட்டது குறித்து உடனடியாக எவருக்கும் அறிவிக்கப்படவில்லை. பல மணித்தியாலங்கள் கழித்தே அவர் கைதான விடயம் உலகிற்கு தெரியவந்தது. முதலில் அதனை செய்தியாளர்கள் நம்ப மறுத்தனர். ஆனால் அவர்களுக்கு அமெரிக்கப்படையினர் சதாம் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஒளிநாடா காட்டப்பட்டது. அதனையடுத்தே சதாம் கைது குறித்து உலகெங்கும் செய்திகள் பரவின.

சதாமைக் கைது செய்த படை நடவடிக்கைக்கு, செவ்விடியல் 'ஒபரேஷன் - ரெட்டோன்' என்று பெயரிட்டிருந்தனர். 1984ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கிலப்படத்தின் தலைப்பு இது. அதில் மூன்றாவது உலகப்போரில் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களைத் தடுக்க அமெரிக்க மாணவர்கள் கெரில்லாக்களாக மாறுவதைப் போன்று கதை அமைக்கப்பட்டிருந்தது.

### தலைமுதல் கால் வரை சோதனை

கைது செய்யப்பட்டவர் சதாம் தானா என்பதை ஊர்ஜிதப்படுத்த அமெரிக்க மருத்துவ நிபுணர்களும் உடலியல் கூற்று நிபுணர்களும் அவரை அங்குலம் அங்குலமாகப் பரிசோதித்தனர்.

வளைகுடாப் போரின் போது சதாம் போன்று பலர் நடமாடுகின்றனர் என்று செய்திகள் வெளியாகின. ஈராக் போரின் போதும் இவ்வாறான செய்திகள் வெளியாகின. இதனால், கைது செய்யப்பட்டவர் உண்மையிலேயே சதாம் தானா? என்பதைக் கண்டறிவதில் அமெரிக்கப்படை ஆர்வம் காட்டியது. அதன்படி அவரிடம் மரபணுச் சோதனை நடந்தது. அவருடைய தலைமுடி, உமிழ் நீர் ஆகியன மருத்துவசோதனைக்குட்படுத்தப்பட்டன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட அவரது புதல்வர்களின் மரபணுக்களுடன் சதாமிடம் இருந்து எடுக்கப்பட்ட மரபணுக்கள் ஒப்பிட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டன.

மருத்துவச் சோதனையில் கைது செய்யப்பட்டது சதாம் என்பது நூறு வீதம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே சதாம் கைது செய்யப்பட்டார் என்ற தகவலை அமெரிக்கா உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

### சதாமின் விரோதிகள் மகிழ்ச்சி ஆரவாரம்


சதாம் கைது செய்யப்பட்டதை அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து சதாமின் விரோதிகள் வீதியில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அடுத்துவரும் ஐந்து நாள்களுக்கு அங்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

குறிப்பாக சதாமின் ஆட்சிக்காலத்தில் அவருக்கு விரோதிகளாக இருந்த குர்திஷ் பகுதி மக்கள் அவர் கைது செய்யப்பட்டதை ஆரவாரத்துடன் கொண்டாடுகின்றனர். தலைமறைவாக உள்ள சதாம் மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று அஞ்சிய இவர்கள் தற்போது நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர் என்று ஈராக்கிய இடைக்கால நிர்வாகக் குழுவின உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தும், வாகனங்களில் குர்திஷ் இனத்தைப் பிரதிபலிக்கும் சிவப்பு நிறக் கொடிகளைப் பறக்கவிட்டும் தமது மகிழ்ச்சியை அவர்கள் வெளிக்காட்டி வருகின்றனர்.


வீதிகளில் குழுக்களாக நின்று கோஷமிடும் அவர்கள், பல பகுதிகளில போக்குவரத்தைத் தடைசெய்து மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பெண்களும் இந்தக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளதை தொலைக்காட்சிகள் காண்பிக்கின்றன.

சதாம் கைது செய்யப்பட்டதற்கு வரவேற்புத் தெரிவிக்கும் வகையில் அங்குள்ள வானொலிகளும், தொலைக்காட்சிகளும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.



சதாம் ஹுசைன் தனது சொந்த ஊரான திக்ரித் அருகே பதுங்கியிருந்த பண்ணை வீட்டையும் அங்கு ஒளிந்திருக்க சதாம் பயன்படுத்திய சுரங்க அறையின் நுழைவாயிலையும் படங்களில் காணலாம்.

உலக வரலாற்றில் புகழ்பெற்று விட்ட மனிதவேட்டை ஒன்று முடிவுக்கு வந்து விட்டது. திக்ரித் நகரிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள 'அத்வர்' என்ற இடத்தில் அமைந்துள்ள பண்ணை வீட்டின் பாதாள அறையில் சதாம் பிடிபட்டார்.




சுரங்கப்பாதையிலிருந்து தனியே கிளைப்பாதையாகப் பிரிந்த ஒடுக்கமான இடத்தில் சதாம் உறங்கிக்கொண்டிருந்தார். அவரிடம் துப்பாக்கிகள் இருந்தன. ஆனாலும் அவற்றைப் பயன்படுத்த சதாம் முயற்சிக்கவில்லை.

### புஷ்ஷின் செல்வாக்கு அதிகரிப்பு

அல்-கெய்டா இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனைப் பிடிக்கமுடியாமல் கோட்டைவிட்ட அமெரிக்கா, சதாமைப் பிடித்தமை ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் செல்வாக்கை மேலும் அதிகரித்துள்ளது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கவுள்ள புஷ்ஷிற்கு சதாம் கைது செய்யப்பட்டமை தேர்தலில் வெற்றியைப் பெற்றுக் கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தீவிரவாதத்திற்கு எதிரான போரை ஆப்கானிஸ்தானில் ஆரம்பித்த அமெரிக்கப்படையினர் ஒஸாமா பின்லேடனைப் பிடிக்க முடியாமல் திணறி வருகின்றனர். சதாமும் பிடிபடாமல் இருந்தது அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. இந்நிலையில், சதாம் ஆதரவு கெரில்லாக்கள் ஈராக்கில் தாக்குதல்களை அதிகரித்தனர். அமெரிக்கக் கூட்டுப் படையினர் அங்கு கொன்று குவிக்கப்பட்டனர். இதனால் அங்குள்ள படையினர் சோர்வடைந்திருந்தனர்.

இந்நிலையில், சதாம் கைது செய்யப்பட்டமை அமெரிக்கக் கூட்டுப்படையினருக்கும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. இது அவர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

### நீதியின் முன் நிறுத்தப்படுவார்

சதாம் ஹுசைன் நீதியின் முன் நிறுத்தப்படுவார் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார். சதாம் கைது செய்யப்பட்டமை குறித்து தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர் -

ஈராக்கில் ஓர் இருண்ட யுகம் முடிந்துவிட்டது. ஆனால்,வன்முறைக்கு முடிவு வந்துவிட்டதாக அர்த்தமில்லை. லட்சக்கணக்கானவர்களுக்கு, சதாம் நீதி கிடைக்காமல் செய்திருக்கிறார். ஆனால், அவர் நீதியைச் சந்திப்பார். சதாம் ஆட்சி மீண்டும் வந்துவிடும் என்று ஈராக்கியர்கள் இனிமேல் கவலைப்படத்தேவையில்லை - என்று தெரிவித்தார்.

ஈராக்கில் ஆட்சிப்பொறுப்பை கவனித்துவரும் அமெரிக்க நிர்வாகியான போல் பிரீமர் கூறுகையில் -

சதாம் விரைவில் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனையை எதிர்கொள்வார். அவருக்கு என்ன தண்டனை வழங்கவேண்டும் என்பதை ஈராக்கிய மக்களே தீர்மானிக்கலாம். சதாம் மீது நூற்றுக்கணக்கான வழக்குகள் உண்டு. அவற்றை எல்லாம் எதிர்நோக்க வேண்டியவராக சதாம் தற்போது இருக்கிறார் - என்றார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறுகையில் -

ஈராக்கில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு சதாம் மீதான குற்றங்கள் குறித்து ஜெனீவா ஒப்பந்தப்படி போர்க்குற்ற விதிமுறைகளின் கீழ் விசாரணை நடைபெறும் - என்று தெரிவித்தார்.

### மரணதண்டனை விதிக்கப்படலாம்

கைது செய்யப்பட்ட சதாமுக்கு, அவர் மீதான குற்றச்சாட்டுக்களின் விசாரணைகளின் முடிவில் மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சதாம், விசாரணைக்காக விரைவில் நாட்டு மக்களிடம் ஒப்படைக்கப்படுவார்" - என்று ஈராக்கிய தேசிய காங்கிரஸ் தலைவர் அகமது சலாபி கூறினார்.

விசாரணைக்காக அவர் ஈராக் மக்களிடம் விரைவில் ஒப்படைக்கப்படுவார். சட்டத்தின் முன் அவர் நிறுத்தப்படுவார். சதாமையும் அவரது பாத் கட்சியினரையும் எவ்வாறு விசாரணை செய்யலாம் என்பது குறித்து கடந்த வாரம் முடிவு செய்யப்பட்டது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக் நடுவர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு சதாம் மீதான விசாரணை நடைபெறவேண்டும் என்று ஈராக்கிய இடைக்கால நிர்வாகக் குழு அமெரிக்காவைக் கேட்டுள்ளது. ஆனால், இதற்கு அமெரிக்கா இன்னமும் பதிலளிக்கவில்லை. ஈராக்கிலேயே சதாமை விசாரிக்க அமெரிக்கா ஒப்புக்கொள்ளுமா என்பது கேள்விக்குறியே என்று கூறப்படுகிறது.

"சதாம் கைது செய்யப்பட்டால் உள்நாட்டிலேயே அவர் ஒரு கைதி போல் நடத்தப்படுவார். அவர்மீது முழு அளவில் விசாரணை நடத்தப்பட்டு தண்டனை விதிக்கப்படும்." - என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஏற்கனவே கூறியிருந்ததை குறிப்பிடத்தக்கது.

குவைத் மக்களைக் கொன்று குவித்தமை, குர்திஷ் இனமக்களை விஷ வாயு மூலம் அழித்தமை, கைதிகளைத் துன்புறுத்தி சுட்டுக்கொன்றமை உட்பட மேலும் பல குற்றச்சாட்டுக்கள் சதாம் மீது சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டு விசாரணைகளின் முடிவில் சதாமுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சதாமுக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதற்கு அவுஸ்திரேலியா ஆதரவு தெரிவித்துள்ளது. அந்நாட்டு ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டுநிற்கின்றன.

### மனித உரிமை அமைப்புகள் வேண்டுகோள்

கைது செய்யப்பட்ட சதாமுடன் உரையாடுவதற்கு அமெரிக்கா அனுமதி வழங்கவேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

போர்க் கைதிகளுக்குரிய வசதிகளை அவருக்கு செய்துகொடுத்து அவரைப் பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் தலைமைப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக சதாம் நடத்தப்படவேண்டும் என்றும் பகைமையைக் கருத்திற்கொண்டு அவரிடம் கொடூரமான விசாரணைகள் நடத்தப்படக்கூடாது என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நடுவர் நீதிமன்றிலேயே சதாம் நிறுத்தப்படவேண்டும் என்று, பல நாடுகள் அமெரிக்காவுக்கு அறிவுரை கூறியுள்ளன. ஆனால், சர்வதேச நடுவர் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை அற்றிருக்கும் அமெரிக்கா, சதாமை அந்த நீதிமன்றின் விசாரணைக் கூண்டில் நிறுத்தமாட்டாது என்று கூறப்படுகிறது.

ஐ.நா. சபையின் துணையுடன் விசாரணை நடைபெறவேண்டும் என்று சர்வதேச சட்டத்தரணிகள் பலர் தெரிவித்துள்ளனர். ✦

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கோவில் வீதி, நல்லூரில் 3½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V.சிவசோதிராஜா, C/o குலேந்திரன், "அம்பிகை வாசா", சண்டிலிப்பாய்.

(25886)

### விற்பனைக்கு

36 ஸ்ரீ தொடரிலக்கமுடைய மெசி பெர்குசன் (M.F) ட்ரக்டர் (புதிய பெட்டியுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஐயா கடையடி, மீசாலை.

(25750)

### காணி விற்பனைக்கு

யாழ்மத்திய கல்லூரிக்கு பின்னும் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலும் முதலாம் குறுக்குத் தெருவில் 1½ பரப்புக காணி கிணறு, மலசலகூடத்துடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு சட்டத்தரணி W.S.செந்தில்நாதன். T.P.:0777 132338 Or 112-587796.

(25882)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள புதன், வெள்ளிக்கிழமை நாள்களில் விநியோகிக்கப்படும். குஞ்சு கொள்வனவு செய்வோரிடம் இருந்து கோழிகள் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:3529, 2867.

(25880)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973 இல் பிறந்த சதய நட்சத்திரம், 2 முழுப் பாவம் உடைய, உயரம் 5'4" கனடாவில் தொழில் புரியும் மணமகன் மாசி மாதம் வரவிருக்கிறார். A/L படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: K.ஆறுமுகம். T.P.:222 7021.

(25858)

### வீடு வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, கோணாவளை லேனில் மூன்று அறைகள், குளியலறை, சமையலறை, தண்ணீர் வசதி, மின்சாரம் முதலான சகல வசதிகளுடனும் அமைந்த வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: தியாகராஜா கிளினிக், 191, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.: 5058.

(25894)

## குடிதண்ணீர் கிணறு மூடப்பட்டது!

யாழ்போதனா வைத்தியசாலையில ஆரம்ப காலத்தில் இருந்து பாவனையில இருந்து வந்த குடிதண்ணீர் கிணறு ஒன்று பாவனைக்குதவாத நிலையில் முற்றுமுழுதாக மூடப்பட்டுள்ளது. கடந்த இருவருடங்களாக இக்கிணற்று நீருடன், கழிவு எரிபொருள கலந்து தண்ணீர் மாசடைந்து காணப்பட்டது.

கிணற்றினைப் பலதடவைகள் சுத்தம் செய்தும் கழிவு எரிபொருள் ஊற்றுத் தொடர்ந்து வந்ததை அடுத்து இக்கிணறு மூடப்பட்டது. (எ-15)

### கார் விற்பனைக்கு

5 ஒஹில்மன் கார் ஒன்று நல்ல நிலைமையில் 60,000/- இற்கு விற்பனைக்கு உள்ளது. தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:

025-2245504

(25897)

---

யாழ்.நகரில்
விற்பனைக்கு வந்துள்ளது

**FAVORL LIGHTS**

சலவைத் தூள்

- Quality Wash -

இது சுண்ணாம்பு நீர்ப் பிரதேசத்துக்காகவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட சலவைத்தூள்.

உடைகளுக்கும் உடலுக்கும் பாதுகாப்பைத் தரவல்ல சுகந்தமான, நறுமணமான, சுத்தமான தயாரிப்பாகும். பக்கவிளைவற்றது.

இன்று யாழ். நகரில் விற்பனையாகின்றது

(34-21-12-17)

---

நவாலி **HSCMF** நிறுவன

ஆதரவில் சங்கைக் கட்டமைத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலய அருகில் ECSC கணனி நிறுவனத்தில்

▲ Diploma in Ms Office
முதலாவது பிரிவு 16.12.2003 இல் ஆரம்பம்

▲ பிரத்தியேக ஆங்கில வகுப்புகள்
ஆண்டு 5,6,7,8,9,10,11 16.12.2003 முதல் பிரபல பட்டதாரி ஆசிரியை மூலம்

▲ பிரத்தியேக கணனி வகுப்புகள்
ஆண்டு 5,6,7,8,9,10,11 - 16.12.2003 முதல்

மற்றும் ஆய்வுக்கட்டுரைகள், Type Setting, சொந்த சேவைகள் சலுகைக் கட்டணத்தில் கிட்ட கல்வியை இன்றே பெற்றிடுவீர்.

(C32091) நாடுக: **HSCMF-ECSC கணனி நிறுவனம்** (34-21-17-12)

---

ஜனவரி முதல் வாரத்தில்

**ASIAN COMPUTER SYSTEMS**

ICM England

நெல்லியடியில்

---

## யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனம் நடத்தும் மாபெரும் சதுரங்கப்போட்டி - 2004

- இப்போட்டி ஆண், பெண் இரு பிரிவுகளாக நடத்தப்படும்.
- வயது வரையறுக்கப்படவில்லை.
- கூடிய தொகையினர் விண்ணப்பிக்கும் இடத்து முதற்கட்ட போட்டிகள் வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சியில் நடைபெறும். இறுதிக்கட்டப்போட்டி யாழ்ப்பாணத்தில் நடக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- இப்போட்டியிலிருந்தே யாழ். சதுரங்க அணிக்கான வீரர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.
- விண்ணப்ப முடிவுதிகதி:- 28.12.2003
- தொடர்பு முகவரி:- **70/1, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(25864) (25-12-17-21) - செயலாளர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**சதாசிவம் சிவபாதசுந்தரம்**

தோற்றம் 04-05-1929 மறைவு 16-11-2003

இன்று (16-12-2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

- குடும்பத்தினர்.

(25898) (26-21-12-17)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர், இசைக்கலைமணி
நாதஸ்வர இசைச் சக்கரவர்த்தி
**இராமையா** அவர்களின் அன்பு மனைவி இல்லத்தரசி

## திருமதி திருமலர் இராமையா

மண்ணுலகில் 13-01-1944 விண்ணுலகில் 27-12-2002

திதி: அட்டமி 16-12-2003

மனிதரில் மாணிக்கமாய் மாதர் குல திலகமாய் மாண்புடன் மாநிலத்தில்
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த திருமலரே! தாயே!
இன்றுடன் ஓராண்டும் வந்ததோ ஒளிவிளக்கு அணைந்து
என்றும் உமது நினைவுடனேயே இப்பூவுலகில் நாம் வாழ்கின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்திபெற ஆவரங்கால் ஆண்டவனின்
பாதார விந்தங்களைப் பணிந்து வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (16-12-2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் ஞாபகார்த்தமாக புத்தூர், ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் நண்பகல் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

10ஆம் கட்டையடி,
ஆவரங்கால், புத்தூர்.

- பிள்ளைகள்.

(28885)(21-12-17)

உதயன்

# வலுவுள்ளோரை நீதியின் முன் நிறுத்துவது எப்போது?

ஈராக்கில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி சதாம் ஹுசைனை அந்த நாட்டை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்கா தலைமையிலான நேசநாட்டுப் படைகள் கைது செய்திருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்திய படைகள் அந்நாட்டின் மீது ஆக்கிரமிப்புப் போரை ஆரம்பித்து, சதாமின் ஆட்சியைக கலைத்து, அந்நாட்டைக் கைப்பற்றிய எட்டு மாதங்களின் பின்னர் சதாம் கைது செய்யப்பட்டிருக கின்றார். கூட்டுப்படைகளின் தீவிர தேடுதல்களின் பின்னர் ஒதுக்குப் புறமான பண்ணை வீடு ஒன்றில் உள்ள பதுங்கு குழிக்குள் இருந்து அவர் பிடிபட்டிருக்கின்றார்.

அவரைப் பிடித்த நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த அமெரிக்கப் படைத் தளபதி, "சதாம் ஓர் எலியைப் போல சிக்கினார்" - என்று குறிப்பிட்டிருக் கிறார். நிலப்பொந்துக்குள் ஓடி ஒழிந்த எலியை பொந்தைத் தோண்டிப் பிடித்தது போல நிலவறைப் பதுங்கு குழிக்குள் ஊடுருவித் தாங்கள் சதாமைப் பிடித்ததாகக் கருத்துத் தெரிவிக்கும் விதத்திலேயே இந்த 'எலி' உதாரணத்தை அவர் தேர்ந்தெடுத் திருக்கின்றார். ஆனால், அந்த உதாரணத்துக்குள் ளும் ஓர் அர்த்தம் பொதிந்துதான் இருக்கின்றது.

ஆட்சிப் பீடத்திலிருந்த சமயமும் அமெரிக்கா தலைமை யிலான கூட்டுப்படைகளின் ஆக்கிரமிப்புத் தொடங்கிய சமயத்திலும் புலி போல செயற்பட்ட சதாம், பின்னர் அத்த கைய உறுதியோடும் உறுமலோடும் இருந்தாரா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது என மேல்நாட்டு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

சதாம் அமெரிக்கப் படைகளிடம் சிக்கிய விதமும், அவருக்கு அப்போது அளிக்கப்பட்டிருந்த பாதுகாப் பில்லாத நிலைமையும் , அப்போது அவர் காணப்பட்ட தோற்றமும் அவர் 'புலி' போன்ற நிலையில் இருக்க வில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அது மட்டுமல்ல, ஏகாதிபத்திய அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக சுதேசிய ஈராக்கியப் போராளிகள் தற்போது நடத்திவரும் கரந்தடித் தாக் குதல் நடவடிக்கைகளுக்கு சதாம் ஹுசைன் தலைமை தாங்கவில்லை என்பதையும் ஓரளவு உறுதிப்படுத்தும் விதத்தில் இந்த அம்சங்கள் இருந்தன என்பதும் கவனிக கத்தக்கது.

ஆகவே, புலியை அல்ல, அமெரிக்கப் படைத் தளபதி கூறுவதுபோல ஓர் எலியைத்தான் அவர்கள் பிடித் தார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த எலியைப பிடிப்பதற்குத்தான் இவ்வளவு காலமாக இத்தனை ஆயிரம் படையினரும் இத்துணை பிரமாண்டமான இராணுவ நடவடிக்கைகளும் இவ்வளவு கோடி டொலா செலவும் வீணாக்கப்பட்டன? இதனைத்தானா 'மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது!' என்பது?

சரி, சதாம் ஹுசைனைப் பிடித்து, அவர் செய்த குற்றங்களுக்காக நீதிக்கு முன் நிறுத்தப்போகிறோம் என்று சர்வதேச பொலீஸ்காரர் பதவியைத் தானே வரித்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் ஜனாதிபதி புஷ் அறிவித்திருக்கின்றார்.

நல்லது. அவர் ஈராக்கை விடுவிக்கின்றேன் என்ற பெயரில் நடத்திய ஆக்கிரமிப்புப் போரில் அந்த நாட்டின இறைமை பறிக்கப்பட்டது; பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்; பல்லாயிரக்கணக்கானோர் படுகாய முற்றனர்; அங்கவீனமாயினர்; ஒரு வரலாற்றுப் புகழ் மிக்க நாட்டின் தேசிய சொத்துக்கள், உடைமைகள அழிக் கப்பட்டன. ஒரு முழு நாடே துவம்சம் செய்யப்பட்டது.

மனிதப் பேரழிவுக்கு வழிசெய்யும் ஆயுதங்களை ஈராக் அதிபர் சதாம் தயாரித்து வைத்திருக்கின்றார் என்ற அபாண்டமான குற்றச்சாட்டை அவர் மீது சுமத்த, அந்த அடிப்படையில்தான் இந்தப் பேரழிவுப் போரை முன்னெடுத்தார் அமெரிக்க அதிபர் புஷ்.

அத்தகைய மனிதப் பேரழிவுக்கு வகைசெய்யும் அணுகுண்டு போன்ற கொடூர ஆயுதங்களை முதன் முதலில் தயாரித்து இந்தப் பூகோளப் பந்தின் மீது பயன்படுத்தி, பல லட்சம் பேரை ஒரே கணத்தில் கொன றொழித்த அமெரிக்கா - அதே ஆயுதங்களை பல நூற் றுக் கணக்கில் தயாரித்து வைத்துக் கொண்டுதான் இந்தக் குற்றச்சாட்டை ஈராக் மீதும் சதாம் மீதும் சுமத்தியபடி இந்தக் கொடூரப் போரை ஆரம்பித்தது.

யுத்தம் ஆரம்பித்து - ஈராக்கைக் கைப்பற்றி - எட்டு மாதங்கள் பூர்த்தியாகிவிட்டன. சதாம் ஹுசைனும் கைதுசெய்யப்பட்டு விட்டார். ஆனால், பேரழிவு ஆயுதங் கள் எதுவுமே அங்கு காணப்படவில்லை.

சதாமை நீதியின் முன் நிறுத்தப் போகின்றோம் எனப் பிரகடனப்படுத்துவோர், பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளன என்ற புருடா கதையை முன்வைத்து, அதனடிப்படையில் கொடூரப் போர் ஒன்றை ஆரம்பித்து பெருமளவு உயிர், உடைமை, சொத்து அழிவுகளுக் கும் இழப்புகளுக்கும் காரணமான புஷ்ஷை எப்போது நீதியின் முன் நிறுத்தப் போகின்றார்கள்? வலிந்தவர் கள் கூறுவதுதான் நீதியா? மெலிந்தவர்கள் ஆற்றுவ தெல்லாம் நீதிக்கு முரணா? இதுதான் நீதியா?

## தீவுப் பகுதியில் செய்கைபண்ணப்பட்டுள்ள

# வெங்காயம், மிளகாய் பயிர்களில் ஒட்டுண்ணித் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

தீவுப் பகுதியில் பரவலாக செய்கை பண்ணப்பட்டுள்ள வெங் காயம், மிளகாய் போன்ற பயிர்களில் அண்மைக்காலமாக 'ககுக்குட்டா' என்னும் தாவர ஒட்டுண்ணியின் தாக்கம் அதிகரித் துள்ளதாக யாழ்மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக் கம்) ச.சின்னத்துரை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-

தீவுப் பகுதியில் கடந்த காலங்களிலும் இதன் தாக்கம் ஓர ளவு காணப்பட்டது. எனினும், இம்முறை அதிகளவில் இதன் தாக்கத்தைப் பயிர்களில் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக, புளியங்கூடல், நாரந்தனை தெற்கு, சின்னமடு போன்ற பகுதி களிலும், இவற்றை அண்டிய இடங்களிலும் இதன் தாக்கம் வேகமாகப் பரவிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒட்டுண்ணித் தாவரமானது மஞ்சள் நிறமுடைய மெல்லிய கொடியாகும். பயிர்களைச் சுற்றிக் காணப்படும் இக் கொடியின் தாக்கம் அதிகரிக்கும்போது, குறிப்பிட்ட பயிர்கள் கொடி யினால் முழுவதும் மூடப்பட்டுவிடும். இதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகள் பயிர்களைச் செய்கை பண்ணிய பின்பே இந்த ஒட்டுண்ணித் தாவரம் முளைத்துப் பயிர்களுடன் ஒன்றிவாழ்வ தால், களை நாசினிகளைப் பாவிக்கமுடியாது உள்ளது. எனவே, 'ககுக்குட்டா' தாவரம் பூப்பதற்கு முன்னர் அதனைப் பிடுங்கி எரித் தல் வேண்டும். இத்தாவரம் காணப்படும் தோட்டங்களில் கால் நடைகள் மேய்வதைத் தடுக்கவேண்டும். அத்துடன், தோட்டங் களையும், நீர்ப்பாசன வாய்க்கால்களையும் களைகள் இன்றிச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். இதன் எதிர்ப்புத் தாவரங் களான சோளம், கௌபி போன்ற பயிர்களை எல்லைப் பயிர் களாக நடுகைசெய்யவேண்டும்.

இதுதொடர்பான மேலதிக விவரங்களுக்கு வேலணைப் பகுதி விவசாய போதனாசிரியருடன் தொடர்புகொண்டு விவ சாயிகள் ஆலோசனைகளைப் பெறலாம் என்று அதில் தெரிவிக கப்பட்டுள்ளது. (எ-10)

# வீடமைப்புக் கடன் நிலுவையை முற்றாகச் செலுத்தினால் கழிவு

அச்சுவேலி,டிசெ.16

வீடமைப்புக்கடன் நிலுவையை முற்றாகச் செலுத்துபவர் களுக்கு பணக்கழிவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் வீடமைப்புக்கடன் பெற் றவர்கள் தமது கடன் நிலுவையை முழுமையாகச் செலுத்தினால் 10வீதம் கழிவுத் தொகையாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட் டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் வீடமைப்புக் கடன்பெற்ற பலர் உரியகாலப்பகுதியில் தவணைப் பணத்தைச் செலுத்த வில்லை. இவர்களில் பலர் இடம்பெயர்ந்துள்ளனர். கடன்பெற்று கட்டப்பட்ட வீடுகள் பல இராணுவ நடவடிக்கைகளினால் முற் றாகச் சேதமடைந்துள்ளன. இந்நிலையில் வழங்கப்பட்ட வீடமைப் புக்கடனை திரும்பப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன்படி "வட்டி உட்பட கடன் நிலுவை முழுவதையும் ஒரே தடவையில் செலுத்தினால் முழுத்தொகையில் 10வீதம் கழிவு வழங்கப்படும்" என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் சு.மாசிலாமணி அறிவித துள்ளார். (ஒ-11)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# வட்டியில்லாக் கடனடிப்படையில் விற்பனை வண்டி வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்,டிசெ.16

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி அதிகார சபையின் சந்தைப்படுத்தும் பிரிவினால், ஐந்து பயனாளிகளுக்கு வட்டியில்லாக் கடனடிப்படையில் நடைபாதை விற்பனைக்கூடம் அல்லது நடமாடும் விற்பனை வண்டி வழங்கப் படவுள்ளது.

சுயதொழில் முயற்சித் திட்டத்தின் கீழ் இப்பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நடைபாதை விற்பனைக்கூடம் அல்லது நடமாடும் விற்பனை வண்டியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை - ஐந்து சமுர்த்தி பயனாளிகளுக்கு வீட்டில் விற்பனை நிலையம் அமைப்பதற்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதி யான உபகரணங்களும் வழங் கப்படவுள்ளன என்றும் -

இவற்றை வட்டியில்லாக் கடன் அடிப்படையில் வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

**நாளை**

மார்கழி 02
புதன்கிழமை
(17.12.2003)
திதி : அட்டமி
காலை 6.23 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பிற்பகல் 12.20 வரை
சுபநேரம்: 4.52-6.22
ராகுகாலம்: 12.22-1.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நிகழ்காலத்தைக் கவ னித்துக்கொள்ளுங்கள் அது போதும். எதிர்காலம் தன் னைத்தானே கவனித்துக் கொள்ளும்.

# மகேஸ்வரனுக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

## கல்லுண்டாய் வீடமைப்புத் திட்டத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்ப்பாணம் கல்லுண்டாய்வெளி பகுதியில் இந்துசமய விவகார அமைச்சினால் நிறுவப்பட்ட குடியேற்றத்திட்ட வீடுகள் சிலவற்றைத் திறந்துவைக்கச்சென்ற இந்துசமய விவகார அமைச் சர் தியாகராசா மகேஸ்வரனுக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப் பாட்டம் நடத்தியிருக்கின்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக் களுக்கும் அமைச்சருக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற் றது. இதனால் வீடுகளைத் திறந்து உரியவர்களிடம் அவற்றைக் கையளிக்காமலேயே அமைச்சர் அங்கிருந்து திரும்பினார்.

நாவாந்துறை, மண்டைதீவு மற்றும் யாழ் நகரை அண்டிய பகுதி களில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்துவரும் குடும்பங்க ளுக்காக இருநூறு வீடுகள் அமைக்க அமைச்சர் மகேஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார்.

வீடுகளை வழங்குவதற்கான குடும்பங்கள் தெரிவுசெய்யப் பட்டு, அங்கு அவர்களுக்கான நிலங்கள் எல்லையிடப்பட்டு, வீடு கட்டுவதற்காக அவற்றைத் துப்பரவு செய்யுமாறு அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து கடந்த ஒரு மாதமாக அந்தக் குடும்பங்கள் அங்கு தத்தமது காணித்துண்டுகளை துப் பரவு செய்து அவற்றைப் பராமரித்து வந்தன. அங்கு முதற்கட்ட மாக நிறுவப்பட்ட ஒன்பது வீடுகளே நேற்றுமுன்தினம் மாலை அமைச்சரால் கையளிக்கப்பட இருந்தன. ஆனால், அந்த வீடுகள் ஏற்கனவே, தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படாமல் வேறு இடங்களைச் சேர்ந்த ஒன்பது குடும்பங்களுக்கு வழங்கப்பட இருப்பது இறுதிநேரத்தில் தெரியவந்தது என்று கூறப்படுகி றது. இதனை ஆட்சேபித்தே அங்கு அமைச்சருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் வெடித்தது.

பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கூடி அமைச் சருக்கு எதிராகக் கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்; அமைச்சரோடு வாக்கு வாதப்பட்டனர். சுமார் ஒரு மணிநேரம் அப்பகுதியில் குழப்பநிலை நீடித்தது. அமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலீஸார் ஆர்ப்பாட்டம் செய்த மக்களை அங்கிருந்து அகற்ற முயன்றனர். இறுதியில் அமைச்சர் மகேஸ்வரன் அங்கிருந்து வெளியேறிச் சென்றார். (ஐ-7)

# 'பியவற' சமூக நிலையம் இன்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

சமூகசேவை அமைச்சின் ஒத்துழைப்புடன், கொழும்பு ஹேமாஸ நிறுவனம் சமூக மேம்பாட்டுக்கான நடவடிக்கை நிலையமான 'பியவற' நிலையத்தை இன்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்க வுள்ளது.

யாழ்மாநகரசபையின் பண்ணை வளாகத்தில இன்று பிற்பகல 2.30 மணிக்கு மேற்படி நிலையம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஹேமாஸ் நிறுவனத்தின பிரதம நிறைவேற்று அதிகாரி குசைன்எசுபலி கலந்துகொள்வார்.

சிறுவர்களின் மேம்பாட்டைச் சிறுபராயத்தில் இருந்தே சீரிய முறையில் முன்னெடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இலங்கையின் பல பாகங்களிலும் இவ்வாறான நிலையங்கள் ஏற்கனவே திறந்துவைக்கப்பட்டுள்ளன என்று மேற்படி நிறுவனம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)





# பிரதான போதனைகள்

▲ பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாது விடுவதற்கு பாடங்கள் சுவையற்றதாகவும் வாழ்க்கைக்குப் பொருத்த மற்றதாகவும் இருப்பது ஒரு முக்கிய காரணம்.

▲ பிள்ளைகளை மையமாகக் கொண்டதும் செயலை ஆதாரமாக உடையதுமான கற்பித்தல் முறைகள் கற் பித்தலையும் உருவாக்கும் பிள்ளைகளின் கற்றலையும் சுவையுள்ளதாக்கும்.

▲ கற்கும் விடயங்களைப் பிள்ளைகள் புரிந்து கொண்டால் அவர்கள் அவற்றைத் தமது வாழ்க்கையில் பயன்படுத்துவர்.

அர்த்தமுள்ள கல்விக்கான உரிமை

கல்வி எல்லாப் பிள்ளைகளினதும் அடிப்படை உரிமை. அந்த அடிப்படை உரிமையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு பாடசாலைக் கல்வி பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். அதைப்போன்றே பாடசாலையில் கற்பனவற்றை வாழ்க்கை அனுபவத்துடன் தொடர்புபடுத்தக் கூடியதாக அவர்கள் இருத்தல் வேண்டும். வகுப்பறைக் கல்வியை பிள்ளைகளுக்கு ஏற்றதாகவும் மகிழ்ச்சி ஊட்டுவதாகவும் மாற்றுவதே ஆசிரியர்களுக்கு உள்ள சவால். பிள்ளைகளின் இயற்கையான ஆர்வத்தையும் கேள்வி கேட்கும் விருப்பத்தையும் ஊக்கு விப்பதன் மூலம் ஓர் நல்ல ஆசிரியர் பிள்ளைகள் தங்களைச் சூழவுள்ள உலகை அறிந்து கொள்வதற்கும் அனுபவிப்பதற்கும் உதவுவார். அதுதான் உண்மையான கல்வியின் பலாபலன்.

(சி-32043)



அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(21-14) (சந்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31680)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 - 03 - 1942



மறைவு
11 - 12 - 2002

## திருமதி வடிவேலு பார்வதி

திதி: 16-12-2003

ஆண்டொன்று ஓடினாலும்.....
அழுத குரல் ஓயவில்லை!
மாண்டதென்று யார் சொன்னார்?
மனதில் என்றும் நீ நிறைந்தாய்!
தேறுதல் சொல்லத் தெய்வமே வந்தாலும்
தேறிடுமோ எமதுள்ளம்? தெரியாதோ இது உமக்கு?
ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதி காண
என்றும் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (16-12-2003) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்: ஐ.வடிவேலு
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.210, காரைநகர் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (25766) (21-14)

## வீதி திருத்தம்

சமீபத்தில் பெய்த மழையினால் பலத்த சேதமடைந்துள்ள சண்டிலிப்பாய் மானிப்பாய் பிரதான வீதி தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருத்தப்பட்டு வருகின்றது. இதேவேளை, இளவாலை - பெரியவிளான் பிரதான வீதியில் குண்டும் குழியுமாக இருந்த இடங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன.(ஒ-135)

## குளங்களைத் திருத்த நோராட் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ். குடாநாட்டிலுள்ள குளங்கள் மற்றும் வடிகால்களைத் திருத்தவும், திண்மக்கழிவுகளில் இருந்து உரம் தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கு நோராட் நிறுவனம் 150 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

வழுக்கியாற்றின் அரியாலைத் தடுப்பணைத் திருத்தம், உப்புநீர் உட்செல்வதைத் தடுத்தல், உப்பாற்றின் அரியாலைத் தடுப்பணையை திருத்தி உப்புநீர் உள்ளே செல்வதைத் தடுத்தல், நகரப்பகுதியுள்ள குளங்களைத் தூர்வாரி, சேறு அள்ளி ஆழமாக்கல், தடுப்பணை அமைத்தல், நகரப்பகுதியில் உள்ள வடிகால்களைத் திருத்தி நீர் வழிந்தோடச் செய்தல்.

யாழ்.மாநகரசபையினால் கொட்டப்படும் திண்மக் கழிவுகளை அகற்றி அவற்றிலிருந்து கொம் போஸ்ட் உரம் தயாரித்தல் மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆகியவை இந்த நிதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி திட்ட வேலைகளைச் செய்வதற்குரிய திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-7)


## தேவை

சுன்னாகத்திலுள்ள
ஸ்ருடியோவுக்கு
* படப்பிடிப்பாளர்
* பயிற்சியாளர்
* பில் கிளார்க்

ஆகியோர் தேவை இருபாலாரும் நேரில் வரவும்.

**நியூ சித்திரகலா ஸ்ருடியோ**
திரு.சோ. தேவதாசன்,
கே.கே.எஸ்.றோட்,
சுன்னாகம் (25860)



## சக்தி F.M. தரும்

பண்டிகைக் கால சலுகைக் கட்டணம்

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களை உங்கள் வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க

கட்டணம் ரூபா 3500/= மட்டுமே!

இந்தச் சலுகைக் கட்டணம்
2004 - ஜனவரி 15 ஆம் திகதிவரை மட்டுமே!

தொடர்புகளுக்கு: சக்தி F.M., சக்தி T.V.

அங்கீகரிக்கப்பட்ட யாழ். முகவர்:
ஜோ.எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
(கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை), கண்டுக்குளி.

அதிரடித் தொலைபேசி: 0777 032188
உள்ளகத் தொலைபேசி: 222 7227.
தொலைநகல்: 222 7227 (சி-31899)(31-14-21)



## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

16-12-2003 முதல் 21-12-2003 வரை

இளைஞர்களே!
✪ சக்தி குறைவு ✪ ஞாபகமறதி ✪ பயம்
✪ நடுக்கம் ✪ நித்திரை குறைவு
என்பனவற்றால் தாழ்வு மனப்பான்மையா? கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

காலசெய்து முன்பதிவு செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு:-
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492 Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399

(சி-31861) (21-14)






LG Digitally yours

**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# மக்கள் பயணத்தின் போது தமது வீட்டுப்பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும் பொருள்கள் மீதான தீர்வை விலக்கு விவரம்

**01. இப்பட்டியலிற் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களின் தீர்வை விலக்கு அளவுக்கு அல்லது அதன் பெறுமதிக்கமைவாக ஏதாவது நான்கு வகைப் பொருள்களைப் பயணி ஒருவர் தமது வீட்டுப்பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும் போது அப்பொருள்களுக்குத் தீர்வை விலக்களிக்கப்படும் என்று விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்திருக்கின்றது.**

| | அளவு | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| 01) வானொலிப் பெட்டி அல்லது ஒலிப்பதிவுப் பெட்டி | 01 | தனி | ரூபா6,500 இற்குட்பட்டது |
| 02) ஈருருளி ஒன்று (பொருத்தப்பட்ட தேவையான இணைப்புக்களுடன்) அல்லது ரூபா 2,000/= பெறுமதிக்குட்பட்ட ஈருருளி உதிரிகள் | | | |
| 03) புகைப்படக்கருவி | 01 | தனி | ரூபா35,000 இற்குட்பட்டது |
| 04) மின்குழுக்கான மின்கலங்கள் | 06 | தனி | |
| 05) உடையழுத்தி | 01 | தனி | |
| 06) கதிரைகள் ஆறும் (6) மேசை ஒன்றும் (1) கொண்ட தொகுதி | 01 | தொகுதி | ரூபா2,750 இற்குட்பட்டது |
| 07) மெத்தை | 01 | தனி | |
| 08) காற்றுக்கணையா விளக்கு (அரிக்கன் லாம்பு) | 01 | தனி | |
| 09) பெற்றோமாக்ஸ் | 01 | தனி | |
| 10) மண்ணெய் அடுப்பு, 11) மின்னடுப்பு, 12) எரிவாயு அடுப்பு } என்பவற்றில் ஏதாவது ஒன்று | 01 | தனி | |
| 13) நீர் சூடாக்கி (WATER HEATER) | 01 | தனி | |
| 14) கலக்கி (MIXTURE) | 01 | தனி | |
| 15) கப்பி | 01 | தனி | |
| 16) கத்தி | 02 | தனி | ஒன்று ரூபா300 இற்குட்பட்டது |
| 17) மண்வெட்டி | 01 | தனி | |
| 18) கோடரி | 01 | தனி | |
| 19) பிக்கான் | 01 | தனி | |
| 20) அரிதட்டு | 01 | தனி | |
| 21) சுளகு | 01 | தனி | |
| 22) விளக்குமாறு | 01 | தனி | |
| 23) துடைப்பம் | 02 | தனி | |
| 24) பிட்டுப்பானையும், பிட்டுக்குழலும் | 01 | தொகுதி | |
| 25) தாச்சி | 01 | தனி | ரூபா400 இற்குட்பட்டது |
| 26) இட்டலிச்சட்டி | 01 | தனி | ரூபா500 இற்குட்பட்டது |
| 27) உரலும் உலக்கையும் | 01 | தனி | |
| 28) அம்மியும் குழவியும் | 01 | தனி | ரூபா1500 இற்குட்பட்டது |
| 29) ஆட்டுக்கால் | 01 | தனி | ரூபா1500 இற்குட்பட்டது |
| 30) தோசைக்கல் | 01 | தனி | |
| 31) கேத்தில் | 01 | தனி | |
| 32) துருவுபலகை | 01 | தனி | |
| 33) அரிக்கன் சட்டி | 01 | தனி | |
| 34) சாப்பாட்டுத் தட்டு (வெள்ளி, நெகிழம்) | ½ | டசின் | |
| 35) தண்ணீர்க் குவளை (வெள்ளி, நெகிழம்) | ½ | டசின் | |
| 36) பெரிய தண்ணீர்க் குவளை | 02 | தனி | |
| 37) கண்ணாடிக் குவளை (கிளாஸ்) | ½ | டசின் | |
| 38) வெள்ளிக்கிண்ணம் | 03 | தனி | ஒன்று ரூபா100 இற்குட்பட்டது |
| 39) கரண்டி | 04 | தனி | |
| 40) சட்டி | 02 | தனி | |
| 41) சட்டிமூடி | 02 | தனி | |
| 42) வாளி (இரும்பு, நெகிழம்) | 01 | தனி | ரூபா350 இற்குட்பட்டது |
| 43) சிறிய பானை (அலுமினியம்) | 02 | தனி | ஒன்று ரூபா350 இற்குட்பட்டது |
| 44) பெரிய பானை (அலுமினியம்) | 01 | தனி | ஒன்று ரூபா500 இற்குட்பட்டது |
| 45) பெரிய பானை (மண்) | 02 | தனி | |
| 46) கத்தரிக்கோல் | 01 | தனி | |
| 47) சுடுநீர்ப்போத்தல் | 01 | தனி | |
| 48) சுவர் மணிக்கூடு | 01 | தனி | ரூபா1,000 இற்குட்பட்டது |
| 49) மேசை மணிக்கூடு | 01 | தனி | ரூபா500 இற்குட்பட்டது |
| 50) கால்மிதி | 02 | தனி | |
| 51) நுளம்பு வலை | 01 | தனி | |
| 52) தெய்வப்படம் | 03 | தனி | ஒன்று ரூபா300 இற்குட்பட்டது |
| 53) நெகிழப்பாய் (பிளாஸ்ரிக் பாய்) | 03 | தனி | |
| 54) கைப்பை (தோல் அல்லது நெகிழம்) | 02 | தனி | ரூபா300 இற்குட்பட்டவை |
| 55) கயிற்று வளையம் (நைலோன்) | 01 | தனி | ரூபா500 இற்குட்பட்டது |
| 56) குடை | 02 | தனி | |
| 57) முகம் பார்க்கும் கண்ணாடி சிறிது | 02 | தனி | ஒன்று ரூபா400 இற்குட்பட்டது |
| 58) வழலை (குளியல், சலவை) | ½ | டசின் | |
| 59) சம்பூப்பை | 01 | டசின் | |
| 60) மழைக்கவசம் | 01 | தனி | |
| 61) ஜக்கற் | 01 | தனி | ரூபா400 இற்குட்பட்டது |
| 62) காலணி (சான்ரில்ஸ்) | 01 | சோடி | ரூபா500 இற்குட்பட்டது |
| 63) காலணி (செருப்பு) | 02 | சோடி | ரூபா100 இற்குட்பட்டவை |
| 64) காலணி (சப்பாத்து) | 01 | சோடி | ரூபா1,000 இற்குட்பட்டது |
| 65) தேங்காய் நெய் | 05 | லீற்றர் | |
| 66) மண்ணெய் | 05 | லீற்றர் | |

| | அளவு | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| 67) கிருமிநாசினி (போத்தல் அல்லது கான்) | | | ரூபா1,000 இற்குட்பட்டது |
| 68) ஒரு குடும்பத்திற்கென எடுத்து வரப்படும் பலசரக்குப் பொருள்கள் | | | ரூபா2,000 இற்குட்பட்டவை |
| 69) ஒரு குடும்பத்திற்கென எடுத்து வரப்படும் உணவுப் பொருள்கள் (சிற்றுண்டிகள்) | | | ரூபா1,000 இற்குட்பட்டது |
| 70) ஒரு குடும்பத்திற்குத் தெவையான புடைவை வகை | | | ரூபா4,000 இற்குட்பட்டது |
| 71) குழந்தைகளுக்கான வூல்த் தொப்பி | 03 | தனி | |
| 72) குழந்தைகளுக்கான ஊஞ்சல் | 01 | தனி | |
| 73) குழந்தைகளுக்கான கதிரை | 01 | தனி | |
| 74) குழந்தைகளுக்கான தள்ளுவண்டி | 01 | தனி | |
| 75) குழந்தைகளுக்கான உடை | 01 | தனி | |
| 76) குழந்தைகளுக்கான ஊட்டி (பீடிங்கப்) | 02 | தனி | |
| 77) குழந்தைப் பேணுகைத் தொகுதி (Baby Set) | 01 | தனித்தொகுதி | |
| 78) குழந்தைகளுக்கான உடை தாங்கி (கங்கர்) | 01 | தனி | |
| 79) குழந்தைகளுக்கான றபர் சீற் | 02 | தனி | |
| 80) குழந்தைகளுக்கான மிதிவண்டி | 01 | தனி | |
| 81) குழந்தைகளுக்கான கொமட் | 01 | தனி | |
| 82) திருமண வீட்டிற்கான பொருள்கள் | | | |
| 01. பட்டுச்சேலை | 01 | தனி | ரூபா13,000 இற்குட்பட்டது |
| 02. பட்டுச்சேலை | 01 | தனி | ரூபா4,000 இற்குட்பட்டது |
| 03. பட்டுவேட்டி | 02 | தனி | ஒன்று ரூபா3,000 இற்குட்பட்டது |
| 04. காற்சட்டைத்துணி | 03 | தனி | ஒன்று ரூபா500 இற்குட்பட்டது |
| 05. சேட் | 03 | தனி | ஒன்று ரூபா750 இற்குட்பட்டது |
| 06. சாரம் | 03 | தனி | ஒன்று ரூபா300 இற்குட்பட்டது |
| 07. ரீசேட் | 02 | தனி | ஒன்று ரூபா 500 இற்குட்பட்டது |
| 08. பஞ்சாபி | 02 | தனி | ஒன்று ரூபா1,000 இற்குட்பட்டது |
| 09. பாவாடை | 02 | தனி | ஒன்று ரூபா300 இற்குட்பட்டது |
| 10. சட்டை | 02 | தனி | ஒன்று ரூபா300 இற்குட்பட்டது |
| 11. உடைப்பெட்டி | 01 | தனி | ஒன்று ரூபா1,000 இற்குட்பட்டது |
| 12. அழகூட்டும், மெருகூட்டும் பொருள்கள் | | | ரூபா 1,000 இற்குட்பட்டவை |
| 83) இறுதிச் சடங்கிற்கென எடுத்து வரப்படும் பொருள்கள் | | | |
| 01. வெற்றிலை | 500 | தனி | |
| 02. பீடி (பண்டில்) | 02 | பண்டல் | |
| 03. சுருட்டு | 500 | தனி | |
| 04. வெடிப்பெட்டி | 02 | தனி | |
| 05. மெழுகுதிரி | | | ரூபா200 இற்குட்பட்டது |
| 06. கற்பூரம் | | | ரூபா200 இற்குட்பட்டது |
| 07. சாம்பிராணி | | | ரூபா100 இற்குட்பட்டது |
| 08. உடை | | | ரூபா 1,300 இற்குட்பட்டது |
| 09. காலுறை | | | ரூபா150 இற்குட்பட்டது |

**02.** சிறீலங்காவிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அரச திணைக்கள, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் தாம் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டு வரும்போது அவற்றுக்குத் தீர்வை விலக்களிக்கப்படும்

**03.** தமிழீழத்தில் நிலையாக வதியும் நோக்குடன் சிறீலங்காவிலிருந்தோ வேறு நாடுகளிலிருந்தோ வருவோர் தாம் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டு வரும்போது அப்பொருள்களுக்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

**04.** கல்வி நோக்கத்திற்காகக் கொண்டு வரப்படும் கணனிகளுக்கும் துணைப்பொருள்களுக்கும் தீர்வை விலக்களிக்கப்படும்.

*குறிப்பு:*

**01.** தீர்வை விலக்குப் பெறுவதற்குரிய பொருள்களைக் கொண்டுவரும்போது பொருள்களைக் கொண்டுவருபவரின் பெயர், அடையாள அட்டைஎண் என்பன குறிப்பிடப்பட்டுள்ள முறையான சிட்டைகளைக் (கடையின்பெயர், சிட்டைத் தொடரெண் என்பன தெளிவாக இருத்தல் வேண்டும்) கொண்டு வருதல்வேண்டும்.

**02.** பயணிகளுக்கு வழங்கப்படும் தீர்வைச் சலுகைகளை வாணிப நோக்கத்திற் காகப் பயன்படுத்தல் கூடாது.

## அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் கொண்டுவரும் பொருள்கள் மீதான தீர்வை விலக்கு

**01.** அரச திணைக்களங்கள் முன்னொப்புதலுடன் திணைக்களப் பயன்பாட்டிற் கெனக் கொண்டுவரும் பொருள்கள்.

**02.** அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னொப்புதலுடன் மக்கள் நலப் பயன் பாட்டிற்கும் நிறுவனப் பயன்பாட்டிற்கும் கொண்டுவரும் பொருள்கள்.





தமிழர் ஆசிரியர் சங்கமும் இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மருத்துவ முகாமில் கலந்துகொண்ட ஒருவர் மருத்துவ பரிசோதனைக்குட் படுத்தப்படுவதை முதலாவது படத்திலும் -

மருத்துவ முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

மாணவர்களே!
O/L பரீட்சையை
நிறைவுடன் பூர்த்திசெய்தீர்கள்! அடுத்தது என்ன?

உங்கள் கைகளில் உள்ள
லீவு நாள்களை பயனுள்ளதாக
கழிப்பதற்கு எமது
கணனி நிறுவனத்துடன்
இணைந்து கொள்ளுங்கள்.
A/L கற்பதற்கு ஏற்ற
பாட அலகுகள் கொண்ட பயிற்சி நெறி

விச்சு

இணைய தொழிமுறைக்கான கற்கை நெறி
பதிவுக்கட்டணமாக ரூ.1000/- மட்டும் அறவிடப்படும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*
கணனிப் பயிற்சி நிலையம்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

TRRO LTD

**பயிற்சி நெறி 21.12.2003 ஆரம்பமாகிறது.**
**அதற்கு முன்னர் எமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.**

(C/32046)(35-14-25)

## கசிப்பு வியாபாரி பொலிஸாரிடம் சிக்கினார்

தென்மராட்சி.டிசெ.13

கைதடிப் பகுதியில் பல வருடங்களாகப் பொலிஸாரை ஏமாற்றி வந்ததாகக் கூறப்படும் கசிப்பு வியாபாரி ஒருவர் மாறுவேடத்தில் சென்ற சாவகச்சேரி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினிடம் வசமாக மாட்டிக கொண்டார். இந்தச் சம்பவம் கடந்த வியாழனன்று கைதடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கசிப்பு விற்பனை குறித்து மேற்படி பகுதி இளைஞர்கள் கொடுத்த தகவலை அடுத்து, அங்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக்றோகித, சார்ஜண்ட் தம்புறு, கான்ஸ்டபிள்களான மகிந்த, ச.விநாயகமூர்த்தி ஆகியோர் அடங்கிய குழுவினர் மாறுவேடத்தில் சென்று சம்பந்தப்பட்ட நபரை கையுமெய்யுமாக பிடித்தனர். அதேவேளை -

கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மேற்படி நருடைய வீட்டில் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.(எ-117)

**M.A.** (காமராஜர் பல்கலைக்கழகம்)

**பரீட்சை தொடர்பான முக்கிய அறிவித்தல்**

**18.12.2003 ஆம் திகதி நடைபெறவிருந்த M.Com., M.A. முதலாம் ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் (26.12.2003) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றோம்.**

யாழ். இணைப்பாளர் (காம்ராஜர் பல்கலைக்கழகம்),
*புதிய உயர்கல்லூரி, யாழ்ப்பாணம்.*

(34-14-25) (25893)

நேற்றைய உதயன் 17 ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் பரீட்சைத் திகதி 26-03-2004 என்று உள்ளது

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி மகேந்திரராஜா லக்ஷிகா 16-12-2003

மகேந்திரராஜா - பிரியதர்ஷினி தம்பதிகளின் செல்வப்புதல்வி லக்ஷிகா தனது முதலாவது பிறந்த நாளை இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுசிறப்பாக கொண்டாடுகின்றார். லக்ஷிகாவை அன்பு அப்பா, அம்மா, திவ்வியா அக்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் அனைவரும் அஷ்டலக்சுமி அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். அன்புடன் வாழ்த்தும்...

டச்சு வீதி, உடுவில்.
(25901) (30-14-25)

**த.மகேந்திரராஜா (அப்பா).**

## Pre - Qualification of Construction Contractors

Applications are invited for Pre - Qualification of Contractors (ICTAD grade M8 or above and/or those with working experience in the Jaffna Peninsula) for the proposed **'White Sand Beach Hotel'** at Chaddy Mankumban Velanai, Jaffna.

The Development comprises of two storied buildings with 30 rooms.

Forms could be collected upto **27th December 2003** from the Consultant's office during office hours **(9.00a.m / 4.00 p.m)** or by post on payment of **Rs. 2.000/-** per set in cash or bank draft drawn in favour of **'Ranjan Nadesapillai Associates'**

Duly completed applications should be forwarded to the Consultant's Office at the address given below under sealed envelope on or before **2.00 p.m, on 30th December 2003**

Manager,
**Ranjan Nadesapillai Associates**
Chartered Architects Engineers Quantity Surveyors
& Interior Designers
200, George R. de Silva Mawatha, Colombo 13.
Tel: 011 2320748, 011 4617810

(C/32044)(35-14-25)

**St.John's Nursery School**
**Chundikuli**

▲ 2004 ஆம் ஆண்டின் புதிய தவணை 05.01.2004 ஆரம்பமாகும். ஆரம்பிக்கப்படும் பிரிவுகள் 3+, 4+
▲ குறிப்பிட்ட சில வெற்றிடங்களே உள்ளன.
▲ விண்ணப்ப முடிவு திகதி: 31.12.2003
▲ விண்ணப்பப் படிவங்களை

**பரி.யோவான் ஆலயம்,**
*பிரதான வீதி, சுண்டிக்குளியில் பெற்றுக்கொள்ளலாம்.*

Manager,
**St.John's Nursery School,**
**Chundikuli**

(25887)(34-14-25)

## 31 ஆம் நாள் நினைவு வழிபாடு



## அமரர் தேவமலர் செல்வரட்ணம்

**(தேவி ரீச்சர்)**

அன்புசால் நண்பர்கள், குருக்கள், தேவி ரீச்சர் விபத்துக்குள்ளாகியிருந்தபோது உதவி செய்த அனைவருக்கும், அவரது மரணத்தையடுத்து நேர்ந்த ஒவ்வொரு தேவைகளையும் சந்தித்த அன்பர்கள், மரணச்சடங்கில் பங்குகொண்ட ஒவ்வொருவருக்கும் எம் மனமுவந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும், அன்னாரது வாழ்வையும், பணியையும் நயந்து இறைவனுக்கு நன்றி படைக்கும் வழிபாட்டிலும் கலந்துகொள்ள உங்களை விநயமாய் அழைக்கின்றோம். தனித்தனியாக உங்களை சந்தித்து நன்றி கூறவும், அழைப்பு விடுக்கவும் முடியாத எம் நிலையை எண்ணி வருந்துகின்றோம். தயைகூர்ந்து, எம் இயலாமையைப் புரிந்து ஏற்று இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை மருதனார்மடம் வில்லியம் மேதர் ஞாபகார்த்த பெண்கள் நிலையத்திலுள்ள சிற்றாலயத்தில் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் வழிபாட்டிலும், தொடர்ந்து குறுகிய நேர ஒன்றுகூடலிலும் கலந்துகொள்ள அழைக்கின்றோம். இதையே *தனிப்பட்ட அழைப்பாக* தயைகூர்ந்து ஏற்கும்படி வேண்டுகின்றோம்.

வில்லியம் மேதர் பெண்கள் நிலையம்,
மருதனார்மடம். (25888)(35-14-25)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(இராசா)

இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - சுவக்கீனா தம்பதியரின் அன்பு மகனும் நட்சேஸ்திரத்தின் அன்புக் கணவரும் மனோகரன் (இந்தியா), மனோகரி (பிரான்ஸ்), செல்வக்குமார் (ஜேர்மனி), சேவியர் (பிரான்ஸ்), ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அந்தோனியாப்பிள்ளை, மனுவேற்பிள்ளை, பிலிப்ராஜநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரது நல்லடக்கம் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.மனுவேற்பிள்ளை
(சகோதரன்).

*கல்லூரி வீதி, இளவாலை.* (25890)(34-14-25)

### திருமதி முத்தையா முத்தம்மா

புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முத்தையா முத்தம்மா நேற்று (15.12.2003) திங்கட்கிழமை புங்குடுதீவில் காலமாகிவிட்டார்.

அன்னார் நாகலிங்கம் பொன்னாச்சியின் அன்பு மகளும் வள்ளியம்மை (சேமமடு) அவர்களின் சகோதரியும் காலஞ்சென்ற தையல்நாயகி மற்றும் தெய்வநாயகி (ஜேர்மன்), இரங்கநாயகி (தாதிய உத்தியோகத்தர், ஓய்வூதியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசு (ஜேர்மன்), காலஞ்சென்ற துரையப்பா மற்றும் ஜெயரெட்ணம் (வாட்பரிசாரகர், ஓய்வூதியம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெகநாதன், இராமநாதன் (வவுனியா) ஆகியோரின் சிறிய தாயாரும் விநாயகமூர்த்தி - பவானி (சுவீஸ்), தர்மராசா - புஸ்பராணி (ஜேர்மன்), ஜெயக்குமார் - மாது (சுவீஸ்), காலஞ்சென்ற சந்திரபாலன் மற்றும் ரஞ்சினி (யாழ்ப்பாணம்), புஸ்பலதா (சுவீஸ்), லிங்கன் - விஜிதா (சுவீஸ்), சதீஸ்குமார் - விஷயலெட்சுமி (ஜேர்மன்), பிறேமகுமார் - சுதா (சுவீஸ்), தமிழ்ச்செல்வன் - சிவாஜினி (சுவீஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல புங்குடுதீவு, 2 ஆம்வட்டாரம் மணல்காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரியம்மன் வீதி,*
*2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.*
*060-222-3220* (25899)(34-14-25)

தகவல்:
மருமகன்: ஜெயரெட்ணம்,
மகள்: இரங்கநாயகி.

### திருமதி இரத்தினம் தங்கேஸ்வரி

இருபாலை, V.H.லேனைச் சேர்ந்த திருமதி இரத்தினம் தங்கேஸ்வரி நேற்று (15.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சீதாதேவி தம்பதிகளின் மகளும் செங்கமலம், சரஸ்வதி, நடராசா, கனகலிங்கம், இராசமணி ஆகியோரின் சகோதரியும் பத்மதேவன், மகேந்திரன், உதயகுமார், சாந்தகுமாரி, காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் சிவகுமார், அருந்ததி, கற்பகநாதன், மகேஸ்வரன், சசிகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகம்மா, இந்துராணி, ஜெயராணி, தனபாலசிங்கம், சந்திரிகா, சந்திரசேகர், சுஜாதா, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியாரும் உதயரூபன், தனீஸ்வரன், சசிகரன், தயாபரன், கேசரூபன், யாஹுதி, தமோதனன், அருள்நிதி, யசோதாநிதி, யதுர்ஷன், மதுஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 1.00மணியளவில் தகனக்கிரியைக்காக செக்கடிமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.H.லேன்,
இருபாலை. (25900)(35-14-25)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ள 01-01-2004 முதல் நடைமுறைக்கு வரவிருக்கும் தீர்வைப் பட்டியல்

| வகை | தீர்வை |
|---|---|
| **01 உணவு வகைகளும், பருகைகளும் உள்ளீடுகளும்** | |
| 01 குழந்தைகளுக்கான உணவு வகைகள் | இல்லை |
| * லக்ரோயன் - தரம் 1 | |
| * லக்ரோயன் - தரம் 2 | |
| * எசு. எம். ஏ (SMA) | |
| * செரிலக் | |
| * நெசுரம் (NESTAM) | |
| * குழந்தைகளுக்கான விசுக்கோத்து | |
| 02 பாஸ்மா வகைகள், சுவையூட்டப்பட்ட பால் வகைகள் | 5.0% |
| 03 கருவுற்றதாய்மாருக்கான ஊட்டப்பொருளும், உணவு வகையும் | இல்லை |
| * அன்மம் | |
| * திரிபோசா | |
| * குங்குமப் பூ | |
| 04 ஊட்டப்பொருள்கள் | 5.0% |
| 05 தேயிலை, கோப்பி | 5.0% |
| 06 இறக்குமதி அரிசி | 7.0% |
| 07 கோதுமை மா | 7.0% |
| 08 இனிப்பூட்டிகள் (சீனி, சர்க்கரை, வெல்லம், கற்கண்டு, பனங்கட்டி) | 7.0% |
| 09 கூலம், பருப்புவகை உட்படப் பலசரக்குப்பொருள்கள் | 7.0% |
| 10 கருவாடு | 7.0% |
| 11 தேங்காய்நெய் உட்பட உணவு நெய் வகை | 10.0% |
| 12 பழங்கள் | 10.0% |
| 13 கொப்பரா | 10.0% |
| 14 வெதுப்பகப் பொருள்கள் | 10.0% |
| 15 மரக்கறி, லீட்சு, போஞ்சி, கரட் | இல்லை |
| 16 ஏனைய மரக்கறி, கிழங்கு வகைகள் | 15.0% |
| 17 கோழி இறைச்சியும் இறைச்சிக் கோழியும் | 15.0% |
| 18 மென்பருகை | 15.0% |
| 19 இனிப்புவகை | 15.0% |
| 20 விசுக்கோத்து வகைகளும் குளிர்களிக்குழாய்களும் | 15.0% |
| 21 பதப்படுத்தப்பட்டுப் பொதிசெய்யப்பட்ட உணவு வகைகள் | 15.0% |
| 22 கோழி முட்டை (ஒன்றிற்கு) | ரூபா 2 |
| 23 தேங்காய் (ஒன்றிற்கு) | ரூபா 1 |
| 24 மருத்துவ உணவுப் பொருள்கள் | இல்லை |
| * ஆட்டாமா, ஆட்டா அரிசி | |
| * தேன் | |
| * வேப்பெண்நெய், ஆமணக்கெண்நெய், இலுப்பெண்நெய் | |
| * அயடீன் கலந்த உப்பு | |
| 25 பனிக்கட்டி | இல்லை |
| 26 கனியுப்புக் கலந்த நீர் | இல்லை |
| **02) மருந்து வகைகள் மருத்துவக் கருவிகள்** | |
| 01 மருந்து வகைகள் | இல்லை |
| 02 மருத்துவக்கருவிகள் | இல்லை |
| **03) புடைவை, துணி, நூல் வகைகள்** | |
| 01 புடைவை வகைகள் | 10.0% |
| 02 றெக்சீன் | 10.0% |
| 03 திரைச்சேலைகள், மேசைவிரிப்புகள் | 10.0% |
| 04 நூல்வகைகள் | 10.0% |
| **04) தூய்மை பேண் பொருள்கள்** | |
| 01 தூய்மைத் துணி | இல்லை |
| 02 தொற்றுநீக்கிகளும் பூச்சிக் கொல்லிகளும் | 7.0% |
| 03 வழலை | 8.0% |
| 04 வழலைத் தூள் | 8.0% |
| 05 ஏனைய தூய்மை பேண் பொருள்கள் | 10.0% |
| **05) தாள்கள், அச்சிட்ட தாள்கள், புத்தகங்கள்** | |
| 01 மாணவர் பயிற்சிப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள், படங்கள் | இல்லை |
| 02 மாணவர் பயிற்சிக் கொப்பிகள் (சீ.ஆர் கொப்பி தவிர்ந்தவை) | இல்லை |
| 03 செய்தித்தாள்கள் | இல்லை |
| 04 புத்தகங்கள், நாவல்கள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் | இல்லை |
| 05 சி. ஆர். கொப்பி, புள்காப் தாள், ஏனைய தாள்வகைகள் | 20.0% |
| 06 ஏனைய அச்சிட்ட தாள், படம், நாள்குறிப்பு, நாள்காட்டி | 20.0% |
| **06) கட்டடப்பொருள்களும் மரங்களும்** | |
| 01 மணல், கல் | இல்லை |
| 02 மரங்கள், தீராந்திகள், றீப்பைகள் | இல்லை |
| 03 கூடாரத் துணி | 10.0% |
| 04 ஓடு (ஒன்றிற்கு) | ரூபா1 |
| 05 சிமெந்து (ரூபா350 இற்குட்பட்டவை) (பை ஒன்றிற்கு) | ரூபா50 |
| 06 சிமெந்து (ரூபா350 இற்கு மேற்பட்டவை) | 15.0% |
| 07 கட்டடப்பொருள்கள் | 15.0% |
| 08 மை வகைகள் | 15.0% |
| 09 ஒட்டுப் பலகை | 15.0% |
| **07) இரசாயனங்கள்** | |
| 01 வேளாண் உள்ளீடுகள் | இல்லை |
| * உரவகை | |
| * பூச்சி கொல்லிகள் | |
| * களை கொல்லிகள் | |
| 02 மீன்பிடிப்படகொட்டும்பசை | இல்லை |
| 03 ஏனைய இரசாயனங்கள் | 15.0% |
| **08) வளர்ப்பு உயிரிகள், கால்நடை உணவுகள், கால்நடை மருந்துகள்** | |
| 01 வளர்ப்பிற்கான விலங்குகள், பறவைகள், மீன்கள் | இல்லை |
| 02 கால்நடை உணவு | |
| * தவிடு, பிண்ணாக்கு | |
| * கோழித்தீன் | |
| * கருவாட்டுத்தூள் | |
| 03 கால்நடை மருந்துகள் | இல்லை |
| **09) பயன்தரு மரங்கள், நாற்றுகள், விதைகள்** | |
| 01 பயன்தரு மரங்கள், நாற்றுகள் | இல்லை |
| 02 விதைகள் | இல்லை |
| **10) வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள்** | |
| 01 பாய்வகை | 10.0% |
| 02 அலுமினியப் பொருள்கள், வெள்ளிப் பொருள்கள் | 15.0% |
| 03 கல்வனைக வாளிகள் | 15.0% |
| 04 ஏனைய, வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் | 15.0% |
| **11) அணைகலங்கள்** | |
| 01 அணைகலங்கள் | 20.0% |
| **12) விளையாட்டுப் பொருள்கள்** | |
| 01 குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் | இல்லை |
| 02 விளையாட்டுப் பொருள்களும் கருவிகளும் | 10.0% |
| **13) படகுகள்** | |
| 01 படகுகள் | இல்லை |
| * வள்ளம் | |
| * கன்னார்ப்படகு | |
| * இழுவைப்படகு | |
| * ஏனைய படகுகள் | |
| **14) ஊர்திகள்** | |
| 01 மாட்டுவண்டி, குதிரைவண்டி | இல்லை |
| 02 மூன்று சில்லு உருளிகள் | இல்லை |
| 03 ஈருருளிகள் | 7.5% |
| 04 உந்துருளிகள் | 7.5% |
| 05 உழவுச் சிற்றூர்திகள், உழவுச் சிற்றூர்திப் பெட்டிகள் | 7.5% |
| 06 இழுபொறிகள், இழுபொறிப் பெட்டிகள் | 7.5% |
| 07 ஏனைய ஊர்திகள் | 10.0% |
| **15) பொறிகள்** | |
| 01 வெளியிணைப்புப் பொறிகள் | இல்லை |
| 02 வேளாண் தொழில்சார் பொறிகள் | இல்லை |
| * நீர் இறைக்கும் மோட்டார் | |
| * ஏனைய, வேளாண் பொறிகள் | |
| * நீர் இறைக்கும் பொறி | |
| * நெல்லு வெட்டும் பொறி | |
| 03 தொழில்சார் பொறிகள் | 10.0% |
| 04 அலுவலகப் பொறிகள் | 15.0% |
| **16) கருவிகள்** | |
| 01 கடற்றொழிற் கருவிகள் | இல்லை |
| * வலைகள், பிணைகள், மிதப்பிகள், கருவிகள் | |
| 02 வேளாண் தொழில்சார் கருவிகள் | இல்லை |
| * சொட்டு நீர்ப்பாசனக்கருவிகளும், குழாய் வகைகளும் | |
| * கப்ளிங், புட்வால்வ் | |
| * அல்கத்தீன் குழாயும் இணைப்பும் | |
| * தெளிகருவி | |
| * மண்வெட்டி, முள்ளு மண்வெட்டி | |
| * அரிவாள் | |
| * காட்டுக்கத்தி | |
| * கலப்பை | |
| 03 தொழில்சார் கருவிகள் | 10.0% |
| 04 மழிக்கும் கருவிகள் | 10.0% |
| 05 நிறுத்தல், முகத்தல் அளவைக்கருவிகள் | 10.0% |
| 06 அலுவலகக் கருவிகள் | 20.0% |
| 07 மாணவர் பயன்பாட்டுக் கருவிகள் | இல்லை |
| * சோக், சித்திரக் கலர், தூரிகை | |
| * கருவிப்பெட்டி, சீவிலிக்கூடு, அடிமட்டம் | |
| * பென்சில், பேனா, அழிஇறப்பர் | |
| **17) உதிரிகள்** | |
| 01. வெளியிணைப்புப் பொறி உதிரிகள் | 10.0% |
| 02. இழுபொறி உதிரிகள் | 10.0% |
| 03. உழவுச் சிற்றூர்தி உதிரிகள் | 10.0% |
| 04. ஊர்தி உதிரிகள், பொறி உதிரிகள் | 15.0% |
| **18) எரிபொருளும், உராய்வு நீக்கியும், தீப்பெட்டியும்** | |
| 01. விறகு | இல்லை |
| 02. மண்ணெய் | இல்லை |
| 03. பெற்றோல் (லீற்றர் ஒன்றிற்கு) | ரூபா 5 |
| 04. டீசல் (லீற்றர் ஒன்றிற்கு) | ரூபா 5 |
| 05. உராய்வு நீக்கிகள் | 7.5% |
| 06. சமையல் எரிவாயு | 12.5% |
| 07. தீப்பெட்டி ரூபா | 0.25% |
| **19) மின்னியற் பொருள்கள், இலத்திரனியற்பொருள்கள், உதிரிகள்** | |
| 01. மின்னியற் பொருள்களும் உதிரிகளும் | 15.0% |
| 02. இலத்திரனியற் பொருள்களும் உதிரிகளும் | 15.0% |
| 03. மின்கலங்கள் | 15.0% |
| **20) கதிரொளி மின்னாக்கித் தொகுதி** | |
| 01. கதிரொளி மின்னாக்கித் தொகுதி | 12.5% |
| **21) பொதிசெய் பொருள்கள், அடைக்கும் பொருள்கள்** | |
| 01. பொதிகட்டும் தாள்களும் தாள்பைகளும் | 10.0% |
| 02. சாக்கு, நெகிழ்ப்பை (கிலோ ரூபா 50 இற்கு உட்பட்டவை) | ரூபா0.50 |
| 03. சாக்கு, நெகிழ்ப்பை (கிலோ ரூபா 50 இற்கு மேற்பட்டவை) | ரூபா1.00 |
| 04. உணவுத்தாள், சொப்பிங் பை, பொலித்தீன் | 20.0% |
| 05. மதுபான, குளிர்பானப் போத்தல் மூடிகள் | 10.0% |
| 06. வெற்றுக் கலன்கள் | 10.0% |
| 07. காஸ் சிலின்டர் | இல்லை |
| **22) கயிறு வகை** | |
| 01. தும்புக் கயிறு | 10.0% |
| 02. நைலோன் கயிறு | 10.0% |
| 03. சணல் | 10.0% |
| **23) காலணிகள்** | |
| 01. காலணிகள் | 10.0% |
| **24) அழகூட்டும் மெருகூட்டும் பொருள்கள்** | |
| 01. அணிகலன்கள் | 15.0% |
| 02. அழகூட்டும் மெருகூட்டும் பொருள்கள் | 20.0% |
| **25) வெற்றிலை, பாக்கு** | |
| 01. வெற்றிலை, பாக்கு | 10.0% |
| **26) வெறியூட்டும் பொருள்கள்** | |
| 01. வெண்சுருட்டு (ஒன்றிற்கு) | ரூபா0.35 |
| 02. பீடி, சுருட்டு | 20.0% |
| 03. மதுபானம் | 25.0% |
| 04. லேகியம் | 25.0% |
| **27) மெழுகுதிரி** | |
| 01. மெழுகுதிரி | இல்லை |
| **28) கற்பூரம்** | |
| 01. கற்பூரம் | இல்லை |
| **29) பத்தி, சாம்பிராணி, தசாங்கம்** | |
| 01. பத்தி, சாம்பிராணி, தசாங்கம் | 25.0% |
| **30) வெடி** | |
| 01. வெடி | 25.0% |
| **31) ஏனையவை** | |
| 01. ஏனையவை | 15.0% |

(மக்கள் பயணத்தின் போது தமது வீட்டுப்பாவனைக்குக் கொண்டுவரும் பொருள்கள் மீதான தீர்வை விவரம் 07 ஆம் பக்கத்தில்)

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

"மாணவர்களின் கல்விக்குப் பெருந்துணை,
எனக்கும், எனது சேமிப்புக்கும் உறுதுணை!



அஷோக்க பண்டார சமரக்கோன்
ஆசிரியர்,
வேவல வெவ மஹா வித்தியாலயம்
வேவல, தம்புள்ளை

"நான் ஒரு பின் தங்கிய கிராமத்தில் ஆசிரியராகக் கடமை புரிகிறேன். தம்புள்ளையிலிருந்து பாடசாலைக்கு வருவதானால் ஏறக்குறைய ஒன்றரை முதல் இரண்டு மணித்தியாலங்கள் ஆகும். மணிக்கு ஒரு பஸ் தான் உள்ளதென்பதால் தினமும் கண்டி, வத்தேகமையிலிருந்து வேலைக்குச் செல்வதற்கு நான் பட்ட பாடு எனக்கு மட்டுமே தெரியும்.

ஆனால் இந்தத் தொல்லைகள் அனைத்தும் BOXER மோட்டார் சைக்கிளை வாங்கியதன் பின் மாயமாய் மறைந்து விட்டன. இப்பொழுதெல்லாம், பாடசாலைக்குத் தாமதமின்றி மிக எளிதில் போக முடிகிறது. BOXER மோட்டார் சைக்கிள் உள்ளதால் வார இறுதி நாட்களில் வீட்டு அலுவல்களை இலகுவில் முடித்துக் கொள்ளவும், வெளிப்பயணம் செல்லவும் வசதியாகவுள்ளது.

எமது பாடசாலை பின்தங்கிய கிராமப் பகுதியில் தான் அமைந்துள்ளது. BOXER மோட்டார் சைக்கிளின் டபிள் கிறேடில், செஸி மற்றும் ஷொக் அப்ஸோபர் என்பன இப் பாதைக்கு நன்கு பொருந்துகிறது. அதன் 35/35W முன்புற விளக்கின் கூடிய வெளிச்சம் இராப் பொழுதிலும் பாதுகாப்புடன் பயணிக்க ஏற்றது. BOXER மோட்டார் சைக்கிளை மிகச் சுலபமாக ஓட்டிச் செல்லலாம்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை மற்றும் மேலதிக உதிரிபாக விற்பனை வலையமைப்பானது என்றும், என்னை நிழலாகத் தொடர்ந்து துணைபுரிகிறது. என்னுடன் பணியாற்றும் ஆசிரியர்களும் BOXER மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகிறார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

பஜாஜ் இலங்கையில் முன்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

BOXER CT Deluxe

DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600 தொலைநகல் : 4700677, 2687175
மோட்டார் சைக்கிள் பற்றிய விடயங்களுக்கான அவசர அழைப்பு : 4715050
இணைய தளம் : http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹிபத்தக்கண்டிய, அநுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, பக்கலை, பதுளை, திருகோணமலை, மத்துகம, நீர்கொழும்பு, குருநாகல்.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 3/12/2681

## அகவை வாழ்த்து

16.12.2003

பண்ணாகம் தமிழறிஞர் பண்டிதர்

**அ.ஆறுமுகம்**

அவர்கள் இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் 87 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் இத்தருணத்தில் நாம் மனமுவந்து வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றோம். வீசவத்தனை முருகன் பாதம் பணிகின்றோம்.

(25807)(11-18) அன்பர்கள்.


## WALK IN INTERVIEW

### கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

(பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்றது)

வெற்றிடங்கள்: 1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (J.S.O.)
2. பாதுகாவலர்கள் (Patrolmen)

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (J.S.O.)
தகைமைகள்: க.பொ.த (சா/த) சித்தி
உயரம் 5'4" - மார்பு 32"
வயதெல்லை: 20 தொடக்கம் 55 வரை
(ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)
சம்பளம்: ஆரம்பம் ரூபா 4500/= (மாதமொன்று) தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு கூடுதல் ஊதியம் வழங்கப்படும்.

2. பாதுகாவலர்கள் (Patrolmen)
தகைமை: ஆண்டு 8இல் சித்தி
உயரம் 5'2" - மார்பு 31"
வயதெல்லை 20 தொடக்கம் 45 வரை
சம்பளம்: ஆரம்பம் 4000/= (மாதமொன்று)

பொதுவான தகைமைகள்:
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: 1. வாரத்தில் ஒருநாள் ஓய்வு வழங்கப்படும்.
2. E.P.F.E.T.F. சேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.
3. வெற்றிடங்கள்: பருத்தித்துறை, அச்சுவேலி, யாழ்ப்பாணம். அந்தந்த இடங்களைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

3. கிராம அலுவலரின் நற்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, பாடசாலை சான்றிதழ் ஆகிய வற்றின் மூலப்பிரதிகளும் போட்டோப் பிரதிகளுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு 20.12.2003 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

இல.43, கல்லூரி வீதி,
(யாழ். இந்து மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம். **பணிப்பாளர்.**

(சி-32055)(11-18)




## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்

**சின்னத்தம்பி நோயல் மணிமாறன்**

அவர்களின் மரணத்தையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களோடு நாமும் துயரில் பங்கேற்று அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

கல்லூரி வட்டமேசை அங்கத்தினர்,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(25908)(11-18)

## 31ஆம் நாள் நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 16 |
| 06 | 11 |
| 1945 | 2003 |

குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் பொன்னுத்துரை தங்கவடிவேல்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அப்பாவிற்கு இதயபூர்வ அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிள்ளையார் கழலணையை இறைஞ்சி நிற்கின்றோம்.

'மகள்மார்'

மேலும் எமது அன்புத் தெய்வம் மறைந்த செய்திகேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் மனம்நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.
(25909)(11-16-18)

தாய், பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 30.04.1942 மறைவு: 22.06.2003

அமரர் செல்லையா செல்வரத்தினம்

(உரிமையாளர், தேவ் தொலைத் தொடர்பகம்)

திதி: 16.10.2003

என்றும் உங்கள் நினைவுடன்....

குடும்பத்தினர்.

இல.40, நெடுங்குளம் றோட்,
கொழும்புத்துறை.


**IIS**
புலமைப்பரிசில் திட்டம்-2004
போட்டிப் பரீட்சை

எமது புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த மாணவர்களிற்கான தெரிவுப் பரீட்சை நடைபெறும் திகதி 21.12.2003
தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி 24.12.2003
தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாத மாணவர்கள் 20.12.2003 அன்று அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-32059)(11)

**தரம் 6 தொடக்கம்**
O/L, A/L வரை
சித்திரப் பயிற்சிசான்றிதழுடன்
IAT
ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
(25906)(31)

**லக்ஷ்மி சினிமா** இணுவில்
விஜய், ஜோதிகா மற்றும் விவேக் நடித்த
குஷி (சினிமா)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30 (பி.ப.)
(C-31813)(32)

**நாகம்ஸ் சுன்னாகம்**
விக்ரம், ஜோதிகா, மற்றும் ரீமாசென் நடித்த
தூள் (சினிமா)
விசேட காட்சி : 11.00, 3.00, 7.00. (பி.ப.)

**லிபேட்டி** அச்சுவேலி
மாதவன், ஜோதிகா ஸ்ரீதேவி மணிவண்ணன் நடித்த
பிரியமான தோழி (சினிமா)
காட்சிநேரம் : , 3.00, 7.00 (தினசரி)
சனி, ஞாயிறு- 11.00, 3.00, 7.00 (பி.ப.)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விஜயகாந், கிரண் நடித்த
தென்னவன் (சினிமா)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.ப.)
ஜெட்லீ ஜாக்கி JACKIE CHAN நடித்த
WHO AM I? (ஆங்கிலம்)
இரவு 8.45 இற்கு (பி.ப.)

**ராஜா** யாழ்ப்பாணம்
தருண், திரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18 (சினிமா)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.ப.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.


## மரண அறிவித்தல்

### திருமதி கருணானந்தம் புவனேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல 36/9, கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி க.புவனேஸ்வரி நேற்று முற்பகல் காலமானார். அன்னார் கருணானந்தத்தின் அன்பு மனைவியும் பரஞ்சோதி, ரங்கநாதன் (புனர்வாழ்வுப்பகுதி, கச்சேரி) ரவீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), திருசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/9 கச்சேரி,
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்

# மரண அறிவித்தல்கள்

## நாகரத்தினம் பொன்னுத்துரை

(முன்னாள் பிரபல வர்த்தகர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் பொன்னுத்துரை அவர்கள் நேற்று (15.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துரத்தினம்மாவின் அன்புக் கணவரும் கதிரவேற்பிள்ளை, நாகேஸ்வரராஜா, யோகேஸ்வரராஜா, மங்களேஸ்வரன், வனமலர்தேவி, பொன்மலர்தேவி, தவமலர்தேவி, ராஜமலர்தேவி, பூமலர்தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராணி, கமலா, தவமணிதேவி, ரஜனி, இரத்தினகோபால், சண்முகராஜா, பரஞ்சோதி, கங்காதரன் ஆகியோரின் மாமனாரும் ஒளிவளர்மதி, ஸ்ரீலக்சுமி, ஸ்ரீபிரியா, விஸ்ணுராஜ், செந்தூரன், இதயராஜா, இதயகாந்தன், நிருபிகா, அமுதினி, கலைச்செல்வி, ரேவதி, சுகிர்தா, சூரியப்பிரகாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3 மணியளவில் ஊறணி மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி,
ஊறணி.

(C/32060)(11-16-18)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி மனோன்மணி அம்மாள்

நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கானான் சேச்சடி, இருபாலை கிழக்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி அம்மாள் அவர்கள் 14.12.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூதர்கந்தையாவின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு, சச்சிதானந்தன், தில்லையம்பலம், குமாரலிங்கம், செல்வராசா, கோமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதைய இல்லத்தில் இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு 10மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கானான் சேச்சடி,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

(259111)(11-16-18)

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## திருமதி சிவராசா இந்திராணி

வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா இந்திராணி அவர்கள் 13.12.2003 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் தொல்புரம் கிருஷ்ணர் சிவராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லர் - சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மகளும் கிருஷ்ணர் - சின்னம்மா அவர்களின் அன்பு மருமகளும் இராசம்மா, முருகேசு, அமுதம், அம்மணி, முத்துலிங்கம், நரேந்திரன், சோமசுந்தரம், நகுலேஸ்வரி, புஷ்பகலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவயோகன் (கொழும்பு), லோகநாதன் (பிரான்ஸ்), இலங்கநாதன் (கனடா), லோகராணி (கொழும்பு), பத்மராணி (தேவிபுரம்), விஜயராணி (சுவிடன்), ஜெகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, குமாரி, பேரின்பமலர், விநோதினி, மணி, தர்மகுலசிங்கம், முருகதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிசா, கஜன், நிசால், கோகுலநந்தன், ஹரிதாஸ், ஹரிஹரன், வசந்த், பிரதாப், ரம்யா, சுஜீவன், சுபா, நிவேதினி, திவேஷ், தயானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் TORANTO - கனடாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் NORTH YORK இல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.19, வூல்வென்டல் வீதி,
கொழும்பு-13., T.P.: 2439432

(11-16-18)

தகவல்:
N.மணி (மருமகன்).

## திருமதி சண்முகநாதன் காசுமணி

தம்பலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் காசுமணி நேற்று (15.12.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகநாதனின் அன்பு மனைவியும் சதீஸ்கரன் (சவூதி), சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்ணம்மை, கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் சுப்பிரமணியம், பொன்னையா, சின்னத்தம்பி, நாகரத்தினம் (கொழும்பு), திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் கரைச்சி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

(25905)(11-16-18)

தகவல்:
சண்முகநாதன் (கணவர்).

## திருமதி புஷ்பமணி சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பு, வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமாகிய திருமதி புஷ்பமணி சுப்பிரமணியம் அவர்கள் 12.12.2003 வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னபூரணியின் பாசமிகு புத்திரியும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம் சுப்பிரமணியம் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களின் அருமை மனைவியும் மனோகரி (ஆஸ்திரேலியா), சிவானந்தி (கொட்டாஞ்சேனை சென்ற் அன்ரனிஸ் மகாவித்தியாலய ஆங்கில ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலகாந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) அவர்களின் அருமை மாமியாரும் அபயப்பிரதாவின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சிவராசா, திருப்பதி, சோதிநாதன், சிவயோகநாதன், காலஞ்சென்ற மகேந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (16-12-2003) செவ்வாய்க்கிழமை காலை 8.00மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.00மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் மாலை 4.00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48, I.B.C. றோட்,
வெள்ளவத்தை,
T.P. 580894.

(C/32047)(26-11-16-18)

தகவல்:
சிவானந்தி (மகள்)

# திருக்கோவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

கௌசல்யன் தொடர்ந்து உரையாற்றியதாவது:-

நீண்ட நாள்களாக நாம் விடுத்த கோரிக்கையான திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையிலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் எதிர்வரும் ஜனவரி மாதம் இடமாற்றப் பட்டு வைத்தியசாலையை ஒப்படைக்க இணக்கம் காணப்பட்டது.

வவுணதீவு - பாலமுனை கிராம அதிரடிப்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் உள்ள 37 வீடுகளையும் விடுப்பது பற்றி அடுத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்.

தமிழ், சிங்க, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகவும் சமாதானத்துடனும் வாழுவதற்கான சூழலை தொடர்ந்து இருதரப்பும் பேண நடவடிக்கை மேற்கொள்வது என்றும் இணக்கம் காணப்பட்டது.

மட்டு. நகர் எல்லைக்கிராமமான புல்லுமலையில் நாம் புதிதாக முகாம்களை அமைத்துள்ளதாக ஜே.வி.பி.யினரால் மேற்கொள்ளப்படும் பிரசாரம் முற்றிலும் பொய்யானது. நாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது இருந்த நிலையிலேயே இன்றும் இருக்கின்றோம். புதிதாக நாம் அங்கு முகாம் அமைக்கவில்லை என்றார்.

விசேட அதிரடிப்படையினரின் பொலீஸ் அத்தியட்சகர் கருத்துத் தெரிவிக்கையில், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாம் கௌரவித்து சுமுகமான முறையில் நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் - என்றார்.

# மிதிவெடியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நின்ற பூவரசம் மரத்தின் மீதேறி கிளைகளை வெட்டினார். வெட்டப்பட்ட கிளைகளில் ஒன்று கீழே புதைந்திருந்த மிதிவெடியின் மீது வீழ்ந்ததில் அது வெடித்தது. மரத்தின் மீதிருந்ததால் அருணாசலம் அதிர்ஷ்டவசமாகக் காயமின்றித் தப்பினார்.

இதனைத் தொடர்ந்து அக்காணியில் படையினர் மிதிவெடிச் சோதனை நடத்தினர். அப்போது சுமார் 10 மிதிவெடிகள் மீட்கப்பட்டன. பின்னர் அக்காணியில் மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகையை படையினர் நட்டுவைத்தனர். மிதிவெடிகள் அறவே இல்லை என்பது உறுதிப்படுத்தப்படும் வரை காணிக்குள் எவரும் செல்ல வேண்டாம் என்றும் அவர்கள் அறிவுறுத்திச் சென்றனர்.

இந்த நிலையில், முன்னர் வெட்டிய மரக் கிளைகளை அப்புறப்படுத்தும் பணியில் நேற்றுக் காலை அருணாசலம் ஈடுபட்டார். அப்போது மிதிவெடியில் அவர் சிக்க நேர்ந்தது. அதில் அவரது இடது கால் பாதம் மோசமாகச் சேதமடைந்தது. படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஒ-15-31-117)

# மருத்துவபீட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வப்பிரதிநிதிகள் ஆகியோருடன் கற்பித்தல் செயற்பாடுகளில் பங்கேற்கும் வைத்திய நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆக்க பூர்வமான முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

அதன் பின்னர் மருத்துவபீட வளாகத்திலிருந்து துணைவேந்தர் பல்கலைக்கழக அலுவலகம் நோக்கிப் புறப்பட்டார். அப்போது துணைவேந்தரின் காரை முற்றுகையிட்ட மருத்துவபீட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆயினும், மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பயன்படுத்தி துணைவேந்தர் பல்கலைக் கழக அலுவலகத்தைச் சென்றடைந்தார்.

இதனையடுத்து, அங்கு சென்று திரண்ட மாணவர்கள், தமது பிரச்சனைகுறித்து நல்ல முடிவு எடுக்கப்பட பல்கலைக்கழக மூதவை உடனே கூட்டப்பட வேண்டும் என்று துணைவேந்தரிடம் வலியுறுத்தினர்.

மாணவரின் கோரிக்கைகளைப் பரிசீலித்த துணைவேந்தர் நாளை புதன்கிழமை மூதவை கூட்டப்படும் என்று உறுதியளித்தார்.

அதன் பின்னர் மாணவர்கள் கலைந்து சென்றனர்.

நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.குணாளந்தன் மருத்துவபீடத்தின் வரவு நிலைப் பேராசிரியராக நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பதவியேற்றுள்ளார் என்பதும் - இதற்கு ஆட்சேபம் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை நிபுணர்கள் மருத்துவ மாணவர்களின்" சத்திர சிகிச்சை வகுப்புக்களை இடைநிறுத்தியுள்ளனர் என்பதும்- இதனை எதிர்த்து மருத்துவ பீட மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர் என்பதும் - தெரிந்தவையே (ஓ-9)

# ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தல் ஒன்றை வெளியிடுவது என்று ஜனாதிபதி தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டதாகவும், அது குறித்து அடுத்த சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகவும் - அதிகாரிகள் மட்டப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறினார்.

இதேவேளை -அதிகாரிகள் மட்டக்குழுவில் ஜனாதிபதி தரப்புத் தலைவர் மனோ தித் தவல இன்று வெளிநாடு செல்கிறார். அடுத்த மாத நடுப்பகுதியிலேயே அவர் கொழும்பு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# நாடாளுமன்று செல்ல வைகோவுக்கு அனுமதி ரத்து

சென்னை, டிசெ.16

இந்திய நாடாளுமன்ற விவாதத்தில் வைகோ பங்கு பற்றுவதற்கு அனுமதியளித்து சென்னை மேல்நீதிமன்ற நீதிபதி குலசேகரன் நேற்றுப் பிற்பகல் வழங்கிய தீர்ப்பை ரத்துச் செய்து அதே நீதி மன்றின் இரண்டு நீதிபதிகள் நேற்று நள்ளிரவு தீர்ப்பு வழங்கினர்.

முன்னைய நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து தமிழக அரசு நேற்று இரவோடு இரவாகத் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் வி.எஸ்.சிர்புர்கார், கண்ணதாஸன் ஆகியோர் நேற்று நள்ளிரவு 11.15 மணிக்கு மேற்படி தீர்ப்பை வழங்கினர்.

(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)

பொது அறிவும் நுண் அறிவும் வெளிவந்துவிட்டது

"ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி நூல்"

☆ இறுதியாக நடைபெற்ற பரீட்சை வினாத்தாள்-1996
☆ கடந்தகால வினாவிடை
☆ எதிர்பார்க்கை வினாவிடை
☆ 150 நுண்ணறிவு பயிற்சிகள்
☆ பொது அறிவு விடயங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டது

■ இந்நூலின் தொடர் ஜனவரி 20 ஆம் திகதி இலவசமாக, கையேடாக வழங்கப்படும் (புத்தகசாலைகளில்)
■ இந்நூல் தொடர்பான இலவச வகுப்புகள் விரைவில்

BY: P.கமல்தாசன் B.A. Spl.Trd.com.Dip .in .mel

கிடைக்குமிடங்கள்:-பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, குர்க்கா (சுன்னாகம்), சிதம்பரப்பிள்ளை (வடமராட்சி), சுப்பிரமணியம், அறிவமுது (வன்னி), கவிதா (வவுனியா) வெளியீடு:BRIGHTMAN PUBLICATIONS

மிகவும் செறிவான நூல்

பொருளியலில் குறைவான சித்தி பெறுகின்றீரா? 
ஆம் ---> 03.01.2004 இல்
(25548)(31-16-28)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பாலசிங்கம்

21,பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்கள் நேற்று (15.12.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி அன்னமுத்து பாலசிங்கம்.

*21,பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.* (25915) (36-16-18)

### வேலுப்பிள்ளை இராசரத்தினம்

(ஆசிரியர், யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

பிறவுண் றோட், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, இராச வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் நேற்று (15.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நீராவியடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அச்சுவேலியைச் சேர்ந்த தனேஸ்வரி(ஓய்வுபெற்ற ஆசிரியை, அச்சுவேலி மத்திய கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும் துஸ்யந்தன்(கொழும்புப் பல்கலைக்கழகம்), கிரிசாந்தன் (B.C.S கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.தனேஸ்வரி(மனைவி).

*இராச வீதி, அச்சுவேலி.* (சி-32065) (36-16-18)

### இளையதம்பி வள்ளியம்மை

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வள்ளியம்மை அவர்கள் நேற்று (15.12.2003) திங்கட்கிழமை இரவு காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.இராசேந்திரம்(மகன்)

*சரவணை கிழக்கு, வேலணை.* (25916) (36-16-18)

### இராசப்பு சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரி)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நாக்கியம்புலம், ஏழாலை மேற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசப்பு சிவலிங்கம் அவர்கள் 14.12.2003 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசப்புவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா-செல்லம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் வதனரூபினி (ஓமான்), மோகன்(ஜேர்மனி), வசந்தன்(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபராஜா(ஓமான்), புவியரசி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விவேஜினி, சுஜீவன், துஷான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், 25/2, தர்மபால மாவத்தை, தெஹிவளை, தொலைபேசி இல:2717427

*நாக்கியம்புலம், சுன்னாகம்.* (25913) (26-36-16-18)

ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்:-17.12.2003 - 4 மணி
திங்கள், வெள்ளி வரை
மாலை 4-6 மணி(S.L.T)
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S வீதி, இணுவில்.

CHEMISTRY CENTRE
Temple Road, நல்லூர்.
A/L 2006
ஆரம்பம்: 16.12.2003
Tue. 1.00 p.m.
★ஒழுங்கமைப்பான யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழு
(சி-32014)

திரிஸ்ரல் சென்ரர்
ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை
ஆரம்பம்:-
17.12.2003 (புதன்)
பி.ப.4 மணி
BY.த.தவசேகர்

CHEMISTRY CENTRE
Temple Road, நல்லூர்
A/L 2004
★ Paper Class
Tue.4 - 5 & Fri.5.30 - 6.30
★அப்பன் சமணிலை
Mon., Tue. 5.30 - 6.30 p.m.
BY: அன்பழகன்

சிறுவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி
CHILDREN'S PROGRAM
இவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
Duration 3 Months
2003 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
பயிற்சி ஆரம்பம் 20.12.2003 02.01.2004

சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி - 2004
விண்ணப்பப் படிவம்
முழுப் பெயர் :..........
முகவரி :..........
பிறந்த திகதி :..........
மேலே தரப்பட்ட விபரம் உண்மை யெனவும் J.T.I விதிமுறைகளுக்கேற்ப நடப்பேனெவும் இத்தால் கையொப்பம் இடுகிறேன்.
திகதி .......... விண்ணப்பதாரரின் கையொப்பம் ..........

Course Contents
Introduction, Word XP,
Excel XP, Power Point XP,
Encyclopedia,
Games & Drawings

பதிவாளர்
இல. 07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
e-mail : jti@sltnet.lk T.P. 0777-292127

2003ம் ஆண்டு G.C.E(O/L) எழுதிய மாணவர்களுக்கான
விசேட கணனிப் பயிற்சி நெறி
Diploma in Visualize Management
Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document Management, Print Spooling & job management through MS WORD XP, Creating and delivering presentation through MS POWER POINT XP, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL XP.



| கட்டணம் | ~~2500/=~~ |
|---|---|
| சலுகைக் கட்டணம் | 1250/= |

காலம் - 3மாதங்கள்

சான்றிதழ்களை மட்டுமே அடுக்கி வைத்துக்கொண்டு அடுத்து என்ன செய்வது? சான்றிதழ்களை மட்டுமல்ல, கணனி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களிலோ அல்லது சுயமாகவோ கணனி வேலைவாய்ப்பினை உருவாக்கிட உங்கள் கணனி நண்பன் SCC

பயிற்சி ஆரம்பம்
பிரிவு I 20.12.2003
பிரிவு II 02.01.2004

Soft View Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
scclanka@hotmail.com
Arya Gowder Road,
West mambalam Road,
Chennai 600 033, India.
T.P : +91-44-4891286

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


# கணனி கற்கை வழிகாட்டி


# IIS-தகவல் தொழில்நுட்பத்தின் ஓர் மையம்

இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர்கல்வி வழங்கிவரும் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றாக IIS நிறுவனம் விளங்கி வருகிறது. 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இலங்கையின் வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டியுள்ளது. உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் தகவல் தொழில் நுட்பத்துறையில் முன்னணி வகிக்கும் பல்வேறு நிறுனங்களின் அங்கீகாரத்துடன் அறிவுத்துறை சார்ந்ததும், தொழில்துறை சார்ந்ததுமான பட்டங்களை வழங்கிவருகிறது.

இலங்கையின் கணனி மையங்களின் உயர்ந்த தரத்தினைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட கணனிப் பயிற்றுவிப்பு மையங்களின் கூட்டமைப்பின் (ACTOS-Association of Computer Training Organizations) அங்கத்துவ நிறுவனம் என்பதும் பிரித்தானியாவின் Edexcel International நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது


வடக்கில் செயற்பட்டுவரும் தனியார் கணனிப்பயிற்சி நிறுவனங்களுள் அதிகளவு வளத்தினைக் கொண்டு இயங்கும் முதன்மையான நிறுவனம் என்பது மட்டுமல்லாது கணனித்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளக்கூடிய தனித்துவம் மிக்க நிறுவனமாகும்.



அதி நவீன வசதிகளுடன் கூடிய கணனிகளைக் கொண்டு ஆய்வுகூடம்



நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய விரிவுரை மண்டபங்கள்



ஒவ்வொரு மாணவரின் நலனிலும் காட்டப்படும் தனிப்பட்ட அக்கறை



மாணவர்களின் அறிவுப்பசியைத் தீர்க்கும் புதிய தெரிவுகளைக் கொண்ட நூலக வசதி

## தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற BTEC HND தகைமையை IIS நிறுவனம் வழங்குகிறது

IIS நிறுவனமானது பிரிட்டனின் Edexcel இனால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பயிற்சி மையமாகும் Edexcel என்பது இலண்டன் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுனர் சபையாகும். இவ்வமைப்பு உலகளாவியரீதியில் தொழில்சார் வல்லுநர்களை உருவாக்குவதற்கென. தமது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களூடாக (Higher National Diploma) பயிற்சி நெறிகளை நடாத்திவருகிறது. BTEC HND (Higher National Diploma) என்பது கணனித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப்பயிற்சிநெறியாகும்.

IIS நிறுவனமானது இலங்கையின் தலைநகருக்கப்பால் இயங்கும் Edexcel இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு HND பயிற்சி மையமாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தை குடாநாட்டு மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதனூடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கணனித்துறை சார்ந்த உயர்ந்த பதவிகளையுடைய வேலைவாய்ப்புக்களை தட்டிக்கொள்வது மட்டுமல்லாது ஓர் சர்வதேச கணனிப்பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

### கணனித்துறையில் நீங்கள் பட்டதாரியாவதற்கு

நீங்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? எனில் இச்சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேசதரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்.

### IIS இனால் வழங்கப்படும் HND கற்கைநெறிகள்

1. Higher National Diploma in Computing
2. Higher National Diploma in Software Engineering
3. Higher National Diploma in Business Information Technology.

18 மாத கால மேற்படி HND கற்கை நெறிகளின் முடிவில் பிரிட்டன் Edexcel இன் சர்வதேச Higher National Diploma சான்றிதழ்களைப் பெறுவீர்கள். மேற்படி கற்கை நெறியானது உலகளாவிய தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் பல்வேறு சர்வதேச நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிநெறியாகும்.

### IIS இல் உங்களுக்கான வசதிகள்

1. உள்நாட்டு, வெளிநாட்டுப் பட்டதாரிகளின் விரிவுரைகள்.
2. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட ஆய்வுகூடங்களும் விரிவுரை மண்டபங்களும்.
3. முற்றிலும் புதிய வெளியீடுகளைக் கொண்ட நூலக வசதி.
4. மாணவர்களின் திறமையும் ஆளுமையும் வளர்வதற்கான மாணவர்மன்றம்.
5. இலகு தவணை முறையில் கட்டணவசதி.
6. இலவச ஆங்கிலமொழிப் பயிற்சி.
7. வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

### வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதார ரீதியாக நன்மையடையமுடியும்.

### தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களிற்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

## கல்வியாண்டு 2004 இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் : 23.01.2004

## BIT Degree of Bachelor of Information Technology

University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மேற்படி கணனித்துறை பட்டக்கல்வியானது இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தொழில் சார் வல்லுனர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறியாகும்.

இலங்கையில் இக்கற்கை நெறியினை நடாத்தும் முன்னணிநிறுவனங்களில் IIS உம் ஒன்றாகும், வடக்கு கிழக்கில் முதன்மை வாய்ந்த நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு கல்வியாண்டும் மாசிமாதத்தில் கோரப்படுகின்றன.

IIS இனால் வழங்கப்பட்டுவரும் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற Diploma கற்கை நெறிகள்.

- Diploma in Computer Programming
- Diploma in Java Programming
- Diploma in Visual C Programming
- Diploma in Visual Basic Programming
- Diploma in Information Technology

உங்கள் முயற்சிக்கு...



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.

An Internationally-Recognized Certificate Course in Computerized Accounting

NEXT GENERATION

- Diploma in MS Office
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Eng. Drawing & AutoCAD
- Diploma in DeskTop Publishing

| | | | | |
|---|---|---|---|---|
| Adobe PageMaker | Adobe Premier | Corel DRAW | MS Excel | Oracle 9i |
| Adobe Photoshop | Macromedia Flash | MS Word | MS Access | Pascal |

New Batches Start
Batch 1 : 03.01.2004
Batch 2 : 05.01.2004
Batch 3 : 14.01.2004
at 10.00 a.m

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
An Edexcel Approved Training Centre
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna. T.P. No. : 021-222 2831 Email:iis@sltnet.lk
Branch : IIS, Nelliyady, Karaveddy.

(C/32017)

# IMS Computer Training Center

## கணனி பயிற்சி நிலையம்

IMS Trusted Excellence

Reg No: VNW/FIN/BR/902/1/2003

# Institute of Micro Systems

Head Offce :Market Lane,Manipay

Branch :Cross Road,Neervely North,Neervely.

கொழும்பில் வெற்றிகரமாக இயங்கிவந்த எமது நிறுவனம் யாழ்மாணவர்களின் நன்மைகருதி மானிப்பாயில் இயங்கிவருகிறது.அது மட்டுமன்றி அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க கிளையென்றினை நீர்வேலியில் விஸ்தரித்துள்ளது. எதிர்காலத்தில் இன்னும் பல இடங்களில் விஸ்தரிக்க உள்ளது என்பதனையும் மிக மகிழ்சியுடன் அறியத்தருகிறோம்.

- காலை 6.00 முதல் மாலை 9.00 மணி வரை வகுப்புக்கள் நடைபெறும்.
- மாணவர்களின் வசதிக்கேற்ப பயிற்சி நேரங்கள் ஒதுக்கித் தரப்படும்.
- கூடியளவு பயிற்சிகளும், வரையறையற்ற பயிற்சி நேரங்களும்.
- தவணைமுறைக் கட்டணம் செலுத்தும் வசதி.
- மேலதிக விளக்கத்திற்கான பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.
- தமிழ் மொழியிலான விளக்கங்களும், விரிவுரைகளும் வழங்கப்படும்.
- அமைதியான சூழலில், அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு மாணவருக்கான தனிப்பட்ட கவனிப்புடன் கூடிய நவீன மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதியும் வகுப்பறைகளும் உண்டு.
- விசேடமாக கணணிசார் தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், பல்கலைகழக மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சிறுவர்கள், முதியோர்கள் போன்றோருக்கான விசேட கணனி வகுப்புக்கள் நடைபெறகின்றன.

### Children Programming

**Level I (Age 5-7)**

1.Introduction to Computer Components
2.Mouse Practice Using Paint & Brush
3.English & Tamil Language Training Cartoon Movie.
4.Educational Computer Games.
 * Keyboard Practice.
 * Mouse Control
 * Memory Practice.
 * Puzzle.

*Duration: 2 Months.*

**Level II (Age 8-10)**

1.Introduction to Computer Components
2.Mouse Practice Using Paint & Brush
3.Typing Practice Using MS-Word.
4.Presentation & Animation Using Power Point.
5.Educational Computer Game.
 * Keyboard Practice.
 * Mouse Control
 * Brain Concentration Practice.
 * Puzzle.
 * General Knowledge.

*Duration: 2 Months.*

**Level III (Age 11-13)**

1.Introduction to Computer
2.Input, Output, Disk,Processor.
3.Mouse Practice Using Paint & Brush
4.Typing Practice Using MS-Word.
5.Calculation Using MS-Excel.
6.Presentation & Animation Using Power Point.
7.Educational Computer Game.
 * Keyboard Practice.
 * Mouse Control
 * Memory Practice.
 Puzzle.
 * General Knowledge.

*Duration: 2 Months.*

**Level IV (Age 14-15)**

1.Introduction to Computer
2.Mouse Practice Using Paint & Brush
3.Typing Practice Using Tutor
4.Type Setting Using MS-Word Advance
5.Calculation & Formulas Using MS-Excel.
6.Presentation & Animation Using Power Point.
7.Educational Computer Game.
 * Keyboard Practice.
 * Mouse Control
 * Memory Practice.
 * Puzzle.
 * General Knowledge.

*Duration: 2 Months.*

### Diploma in Computer Studies

1. Fundamental of Computers.
2. Introduction to Computer Hardware.
3. Introduction to Computer Software.
4. Microsoft-Office XP
 * Microsoft Word
 * Microsoft Excel
 * Microsoft Access
 * Microsoft Power Point
5. Programming Techniques.
6. Programming Using C++ / Pascal.
7. Programming Using Visual Basic.
8. Programming Project Using Visual Basic.

*Duration: 10 Months.*

### Diploma in Desk Top Publishing

1. Introduction to DTP.
2. Type Setting Using Page Maker 7.
3. Vector Design in Coral Draw 11.
4. Photo Editing Using PhotoShop 7.
5. Document Wizard Using Publisher 2000.

*Duration: 6 Month.*

### Diploma in Multimedia

1. Introduction to Multimedia.
2. Vector Design in Coral Draw 11.
3. Photo Editing Using PhotoShop 7.
4. 2D Animation Using Flash MX.
5. Introduction to 3D Animation Using Maya 5.

*Duration: 6 Month.*

### Computer Hardware

1. Fundamental of Computers.
2. Computer Hardware & Software Generation.
3. Operating System MS-DOS & Windows X.
4. Introduction to Computer Components.
5. Assembling a Computer.
6. Installing Software.
7. Maintenance a Computer.
8. Treble Shooting.

*Duration: 6 Months.*

### Computer Type Setting

1. Introduction to Computer
2. Adobe Page Makere 7.
3. Setting Up.
 * Word Art
 * Vector Clipart
 * Raster Photos
 * Vector Auto Shapes.
4. Scanning Techniques Using
 * Using Image Scanner
 * Digital Camera

*Duration:4 Months*

### Certificate in Microsoft Office XP

1.Introduction to Computer
2.Operating System Windows
3.MicroSoft Word XP
4.MicroSoft Excel XP
5.MicroSoft Power Point XP
6.Microsoft Acces XP

*Duration:4 Months.*

### Certificates Courses

* MicroSoft Word XP
* MicroSoft Excel XP
* MicroSoft Access XP
* MicroSoft Publisher 2000
* Adobe Page Maker 7
* Adobe PhotoShope 7
* Corel Draw 11
* Flash MX
* Maya 5
* HTML
* Visual Basic 6
* C++ 3
* Pascal 7

# பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூல் சிறார்களுக்கு வரப்பிரசாதம்

இந்நிறுவனம் சர்வதேச அங்ககாரம் பெற்ற ஓர் பிரித்தானிய வர்த்தகக் கல்லூரி ஆகும். இந்நிறுவனத்தை யாழ்ப்பாணத்திலும் தற்போது, வடமராட்சியிலும் நிறுவியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் இரண்டு வளாகங்கள் இயங்குகின்றன. ஒன்று கச்சேரி வளாகம் ஆகும். இது 174, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும்




முகவரியில் இயங்கிவருகின்றது. மற்றையது யாழ்ப்பாண வளாகம் ஆகும். இது 140, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவருகின்றது. கச்சேரி வளாகத்தில் சர்வதேச ரீதியிலான பாலர் பாடசாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இங்கு கற்பிக்கப்படும் மொழி மூலம் ஆங்கிலத்தில் ஆகும். இங்கு தமிழ் பாடநெறியும் கட்டாய பாடமாகக் கற்பிககப்படுகின்றது.

இப்பாலர்களை மூன்று பிரிவுகளாக வகுத்து பாடம் கற்பிக்கப்படுகின்றது. முதலாவது பிரிவு Play Group ஆகும். இப்பிரிவில் இரண்டு வயதும் அதற்கு மேற்பட்டோரும் அதே வேளை, மூன்று வயதுக்குட்பட்டோரும் அடங்குகின்றனர். இரண்டாவது பிரிவு Montessori School ஆகும். இப்பிரிவில் மூன்று வயதும் அதற்கு மேற்பட்டோரும் அதேவேளை நான்கு வயதுக்கு உட்பட்டோரும் அடங்குகின்றனர். மூன்றாம் பிரிவு Pre School ஆகும். இப்பிரிவில் நான்கு வயதும் அதற்கு மேற்பட்டோரும் அதேவேளை, ஐந்து வயதுக்கு உட்பட்டோரும் அடங்குகின்றனர். இம்மூன்று பிரிவிலும் கல்வியானது கிழமை நாள்களில் காலைநேரத்தில் கற்பிக்கப்படுகின்றது. இக்கிழமை நாள்களில் கற்க வர வசதியற்ற மாணவர்களுக்கு Saturday Prep School என்னும் பிரிவில் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இவ்வகுப்பு சனிக் கிழமை காலை தொடக்கம் பிற்பகல் வரை கல்வி கற்பிக்கப்படும். இங்கு கிழமை நாள்களில் நடைபெறும் வகுப்புகள் ஒரேநாளில் கற்பிக்கப்படும். இங்கு பாவிக்கப்படும் நெறிமுறை AMI முறையும் Canadion முறையும் ஆகும். இங்கு நவீன கற்பித்தல் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாண வளாகம், வடமராட்சி வளாகம் போன்றவற்றில சிறார்கள் விளையாடுவதற்கான உபகரணங்களும், இடவசதிகளும் உண்டு. இதுவன்றி இவ் வளாகங்களில் கல்விகற்கும் சிறார்கள் ஓரளவு ஆங்கிலமொழியில் பேசுகின்றார்கள்.

இப்பாலர் வகுப்புக்களை விட அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் (தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரை) மாணவர்களுக்கு ஒரு வாரத்தில் இரண்டு நாள்கள் பாடசாலை முடிவடைந்த பின்பு வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இவை நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

அவையாவன :



01. Foundation
02. Lower Intermediate
03. Intermediate
04. Upper Intermediate

போன்றனவாகும்.

இந்நான்கு பிரிவுகளிலும் பாடத்திட்டத்திற்கமைய ஓரளவு ஆங்கிலம் பேசக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட வளர்ந்தோருக்கான வகுப்புகளும் எமது நிறுவனத்தில் நடைபெறுகின்றன. இவை பல பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. அவற்றில சில பின்வருமாறு:

01. Certificate in English
02. Diploma in English
03. Advanced Diploma in English

இவை ஒவ்வொன்றும் ஆறு மாத காலத்தில் கற்பிக்கப்படுகின் றன. இப்பாடநெறிகளில் இலக்கணம் மற்றும் பேச்சுததிறனும் கற்பிக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட பாடநெறிகளைத் தவிர விசேட பாடநெறிகளும் நடத்தப்படுகின்றது. அதாவது Oral Communication ஆகும். இது வாரத்தில் மூன்று நாள்களில் நடத்தப்படுகின்றது. இது முற்றிலும் நூறு சதவீதம் பேச்சுப் பயிற்சியாகக் கற்பிக்கப்படுகின்றது.

இவைதவிர, கணனி பாடநெறிகளும் பல பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மிகச் சிறந்த ஆசிரியர்களால் தமிழ் விளக்கத்துடன் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படுகின்றது. சிறார்களுக்கான கணனி பாடநெறி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகினறது. தற்போது கல்விப் பொது சாதாரணதர பரீட்சை எழுதி விட்டு இருக்கும் மாணவர்களுக்கும் கணனி பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பாடநெறிகளைவிட எமது நிறுவனத்தில் விசேட பாலர் பாடசாலை ஒன்று மார்கழி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதாவது Diploma in Montessori and pre School Education ஆகும். இதில் பாடநெறிகளாக

01. சிறுவர் உளவியல்.
02. ஆரம்ப கல்வி கற்பித்தல் முறைகளும் நுணுக்கங்களும்.
03. கற்பித்தல் உபகரணங்கள்
04. கணிதமும் நூலகமும்
05. மொழியும் பிரயோகமும் என வகைப்படுத்தப்பட்டு கற்பிக்கப்படும்.

யாழ்ப்பாண வளாகத்தில் இருநூறிற்கு மேற்பட்ட மாணவர்கள் தமது பாடநெறிகளைப் பூர்த்திசெய்துள்ளனர்.

எமது நிறுவனம் யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும் வடமராட்சி மக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பை பெற்று வருகின்றது.

எமது நிறுவனத்தின் கிளைகள்:

*யாழ்ப்பாணம்:*
140, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

*கச்சேரி:*
174, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

*வடமராட்சி:*
பருத்தித்துறை வீதி,
திராமக்கோட்டடி,
புலோலி.


# முற்றுமுழுதாக பாடசாலை மாணவர்களுக்காக மிகவும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படுகின்றன

**சிறுவர்களுக்கான Kids Program அதாவது 8 முதல் 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஆங்கில, கணித (Mathematics & english) ஆகிய பாடங்களை கணனி முறை மூலமும் Internet & E-mail வகுப்புகளும் துரிதப்படுத்தி கற்பிக்கப்படுகின்றது.**

*Level One*

**KIDS PROGRAM**

Enhance the child's education in a fun and creative way! These adventure computer base education program build essential spelling, mathematics, creativity, phonics,
logic and reasoning skills that give the child an extra edge in the classroom. Amusing games and activities entertain
and simulate hours of creative thinking.

**KIDS LEARN:**

01. Letters & Spelling
02. Vowel teams & Consonant Blends
03. Addition, Subtraction, Sequences & Counting
04. Letter combinations & Vocabulary
05. Parts of speech & Sentence structure
06. Verb tense & Contraction
07. Reading comprehension
08. Telling time & critical thinking
09. Fractions, Multiplication & Geometry
10. Logic and problem solving
11. Keyboard and mouse maneuver.

***Payments Rs 750. 00 per term.***

*Level Two*

**FUNDAMENTALS OF COMPUTER TECHNOLOGY & UTILIZATION**

These courseware show the student how to maximize and configure the hardware he/she has for optimum result in terms of speed & quality. A working knowledge of Windows also will help the student to install and configure most desire computer peripherals. Learn many types of software and unleash the power of Microsoft Word, Excel and Powerpoint 2000 to get organized and 'create' professional looking documents. "The Internet", get the scoop on finding Websites, sending and receiving e-mails and other fun activities that the student-can take part in on the internet.

***Payments Rs. 975. 00 per term***

**"Kids time / Games time"**
**Fridays 4.00 p.m. to 7.30 p.m.**

*Office Hours*

| | |
|---|---|
| *Monday to Friday* | *8.00 a.m. to 6.00 p.m.* |
| *Saturday* | *8.30 a.m. to 2.30 p.m.* |
| *Sunday* | *9.00 a.m. to 1.00 p.m.* |

**Administration Charges Rs. 500.00**
(One time fees for a student)

*Level Three*

**A+ CERTIFICATION COURSE (INTERNATIONAL EXAM/CERTIFICATION)**

Once you are A+ Certified, you will be recognized as a PC maintenance, upgrade, and repair expert. Becoming A+ Certified can open many doors for the students. A+ credential validates that the student have reached a level of competence that is accepted and valued by the industry.

***Payments Rs. 3000. 00 per term.***

*Level Four*

**MICROSOFT CERTIFIED SYSTEM ENGINEERS- PART-1**

**Microsoft Certified System Engineers (MCSE) on Microsoft Windows 2000 credential is the premier certification for professionals who design and implement the infrastructure for business solutions based on the Microsoft Windows 2000 platform and Microsoft Windows Server System.**

***Payments Rs. 3500.00 per term.***

**The MCSE for Windows 2000 certification is a must for us, "says Tony Neuser, director for Microsoft Solutions Practice, Unisys Global Network Services." In recruiting, we won't look at a potential hire unless he's certified.**

(C/32042) UTHAYAN Graphics

**O/L எடுத்த மாண்வர்களுக்கான வகுப்புகளும் மற்றும் "GIT" (A/L Syllabus) இற்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.**




# Canadian Institute of Information Technology

# St. Patrick's College, *Jaffna.*

**Phone : (021) 222-6316 Fax: (021) 222-6316**
**infor@ciitech.org**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் வன்னியசிங்கம் சிறீதரன்** (குரும்பசிட்டி)

நிகழும் சுபானுவருடம் ஐப்பசித் திங்கள் பதினாறாம் நாள் (02.11.2003) ஞாயிற்றுக்கிழமை ஹொலண்டில் இறைவனடி சேர்ந்த அமரர் வன்னியசிங்கம சிறீதரன் அவர்களின் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சுபானுவருடம் மார்கழித் திங்கள் முதலாம் நாள் (16.12.2003) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏழாலை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து ஆலய அன்னதான மண்டபத்தில் மதியபோசனமும் இடம்பெறும். இந்த நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி துரைசிங்கம் பாக்கியரத்தினம்
து.ஜெயமோகன் (மாமா)
குடும்பத்தினர்.

ஏழாலை. (25877) (25-14-21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 04 - 1940



மறைவு 26 - 12 - 2002

**திருமதி செல்லமுத்து தம்பு** (தம்பு ரீச்சர்)

(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர் – யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

ஆண்டு ஒன்று ஆயினும் ஆறவில்லை எம்துயரம்
ஆயிரம் சொந்தங்கள் அவனியில் இருந்தாலும்
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே!
உங்களை நினைத்து நினைத்து எங்கள்
நெஞ்சம் உருகுதம்மா!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'திருவேரகம்'
அல்லாரை, மீசாலை. (25830) (25-21-14)
- குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 05 - 03 - 1933



அரன் அடியில் 30 - 12 - 1999

**அமரர் வே.தர்மலிங்கம்**

(ஓய்வுபெற்ற உபதபாலதிபர், செட்டியகுறிச்சி, பூநகரி)

பாசத்தின் ஒளியாகி நின்றீர்!
பண்பின் இமயமாய் எழுந்தீர்!
பார்முழுவதும் போற்றும் பகலவனாகி
பணி பல புரிந்து பதவி பெற்றீர்!
ஊர் போற்ற எமை எல்லாம் உருவாக்கினீர்!
உண்மை நெறி காட்டிய தெய்வம் நீர்!
கார்மேகம் சூழ்ந்தது போல் மறைந்தீர்!
கனக்கின்ற நெஞ்சுடன் வாழ்கிறோம்
நீர் கண்ணை நிறைக்க நாலாண்டு
நீண்ட போதும் உம் சுவடுகளில் நாம்...

*என்றும் நீங்கா நினைவுடன்*

நி.மு:கேராளிவத்தை ஒழுங்கை, நீர்வேலி மத்தி.
த.மு: ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன்கட்டு, பூநகரி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: ஸ்ரீனிவாசம் ஈர/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

(25790)(35-21-14)

## எழுச்சிப் பேரவைக்கு நடுவப் பணியகம் வெள்ளியன்று திறப்பு

அரியாலை,டிசெ.16

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் நடுவப் பணியகம் எதிர் வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

கோப்பாய் வீதி, கோண்டாவில் பகு தியில் இந்த நடுவப் பணியகம் திறந்து வைக்கப்படும் என்று தேசிய எழுச் சிப் பேரவையின் யாழ்.மாவட்ட செய லாளர் சூ.சிறில் தெரிவித்தார்.(எ-7)

## முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

ஆனைக்கோட்டை கிராம சேவை யாளர் பிரிவில் முதியோர் சங்க மொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை கிராம சேவை யாளர் அலுவலகத்தில், கிராம சேவை யாளர் வை.சந்திரராசா தலைமை யில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தலை வராக ஜோசப் கீதபொன்கலன் தெரிவு செய்யப்பட்டதுடன், 11 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-100)

## கலந்துரையாடல்

உடுவில் பிரதேச செயலாளர் பிரி வில் உள்ள பதிவுசெய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கான கலந்துரை யாடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் பிரதேச செயலாளர் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அடுத்த வருடத்துக்கான விளையாட்டுப் போட்டி கள் மற்றும் விளையாட்டுத்துறையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரை யாடப்பட்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன எனத் தெரி விக்கப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் உறுப் பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு உடுவில் பிர தேச விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (எ-86)

## 8 வருடங்களின் பின்னர் பரீட்சைப் பெறுபேறு

யாழ் மாவட்ட சுகாதார சேவைகள திணைக்களத்தில் கடமைபுரியும் சாரதி களுக்கு சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட வினைத்திறன் காண் தடைப்பரீட்சைப் பெறுபேறுகள தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

தரம் II 'ஆ' வில் இருந்து தரம் II 'அ' வுக்கான இத்தடைப்பரீட்சை யில் 6 சாரதிகள் மட்டுமே சித்தியெய்தி பதவியுயர்வைப் பெற்றுள்ளனர்.(எ-15)

## அன்னதான மண்டபம் திறந்துவைப்பு

ஏழாலை புளியடி ஞானவைரவா ஆலயத்தில் புதிதாக அமைக்கப் பட்ட அன்னதான மண்டபம் கடந்த சனியன்று இந்து கலாசார அலுவல் கள் அமைச்சர் தி.மகேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த மண்டபத்தில் அறநெறிப் பாட சாலை, நூலகம் என்பவற்றை இயக்கு வதற்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு வதாக அப்பகுதிக்கான கிராம அலுவ லர் க.தவராசா தெரிவித்தார்.(எ-150)

## ஓய்வூதியத் திகதி அறிவிப்பு

அரசாங்க ஓய்வூதியம் பெறுபவர் களுக்கு 2004ஆம் ஆண்டு மாதம் தோறும் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ள திகதிகளை ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி பின்வரும் திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படும்:

ஜனவரி 08 ஆம் திகதி, பெப்ரவரி 12 ஆம் திகதி, மார்ச் 11ஆம் திகதி, ஏப்ரல் 06ஆம் திகதி, மே 11ஆம் திகதி, ஜூன் 10ஆம் திகதி, ஜூலை 08ஆம் திகதி, ஓகஸ்ட் 12ஆம் திகதி, செப் ரெம்பர் 09 ஆம் திகதி, ஒக்ரோபர் 07ஆம் திகதி, நவம்பர் 09ஆம் திகதி, டிசெம்பர் 09 ஆம் திகதி. (ஒ-152)

## பிரதான வீதியில் போக்குவரத்து சிரமம்

பண்டத்தரிப்புப் பிரதான வீதியில் சில வர்த்தகர்கள் தங்கள் கடை களுக்கு முன்பாக விற்பனைப் பொருள் களைப் பரப்பிவைத்துள்ளதால் மக் கள் நடமாட்டம் மற்றும் வாகனப் போக்குவரத்து ஆகியவற்றில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வீதி ஓரங்களை யில் மக்கள் நடந்து செல்லும் பாதை தடுக்கப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் விலகிச் செல்வதிலும் சிரமங்கள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரி விக்கின்றனர். (ஒ-135)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

**HAPPY BIRTHDAY**

**16.12.2003**



செல்வன்

**மகேந்திரராஜ் அருண்**

*(லோஷன்)*

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த

**மகேந்திரராஜ் - சசிரேகா**

தம்பதியினரின் ஏக புதல்வன் அருண் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (16.12.2003) செவ்வாய்க் கிழமை தனது அம்மம்மாவின் இல் லத்தில் வெகுவிமரிசையாகக் கொண் டாடுகின்றார். இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

*மத்திய வீதி,*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
சு.சந்திரன் *மாமா*
(அபுதாபி)

(25816) (14-21-35)

## N.C.A கல்வி நிறுவனம்

சரையடி ~ பருத்தித்துறை

O/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு

**A/L 2006**

கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | திரு.அன்ரனி |
| அளவையியல் | - | திரு.பிரபானந்தன் |
| தமிழ் | - | திரு.அகிலன் |
| இந்துநாகரிகம் | - | திரு.இராஜேஸ்கண்ணன் |
| கணக்கீடு | - | திரு.பார்த்தீபன் |
| வடிகக்கல்வி | - | திரு.உதயமோகன் |
| கிறிஸ்தவநாகரிகம் | - | திரு.சுதன் |
| நாடகமும் அரங்கியலும் | - | திரு.பிரதீபன் |

ஏனைய பாடங்களும் நடைபெறும்.

ஆரம்பம்: **23-12-2003**

(25771)(35)

## மூன்றாம் வருட நினைவலைகள்

மண்ணில் 21 ~ 03 ~ 1913



விண்ணில் 18 ~ 12 ~ 2000

அமரா **மு.கனகரத்தினம்**

(முன்னாள் ஊழியர், யாழ்.வைத்தியசாலை)

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முடன்
வாழ்ந்திட்ட தந்தையே!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*என்றும் நினைவில் வைத்திருக்கும*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

32, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(25856)(35-14-21)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1938 - 04 - 06



மறைவு 2003 - 11 - 16

**அமரர் மாரிமுத்து மாணிக்கம்**

திதி: அட்டமி

*மாந்தருள் மாணிக்கமாய் இவ்வுலகில் தோன்றினீர்!*
*புனிதப் பிறவியாய் பாரில் புகழோடு வாழ்ந்தீர்*
*எமை விட்டு மறைந்து நீங்கள் போனாலும் உங்கள் நினைவுகள்*
*என்றென்றும் எமை விட்டு நீங்கிப் போகாது!*

இன்று (16.12.2003) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*ஓடக்கரை வீதி,*
*சிவன் கோவில் அருகில்*
*சங்கானை.*

(25742) (25-14-21)

# பீடைத் தாக்கங்களில் இருந்து நெற்பயிர்களைப் பாதுகாத்துக் கொள்வோம்!

**கமமும் புலமும்**

**தயாரிப்பு:- ஜெயஸ்ரீ**

நாட்டில் தற்பொழுது பெரும்போக நெற்செய்கைக் காலமாகும். வயல்களில் நெற்பயிர்கள் வளர்ச்சி அடைந்து காணப்படுகின்றபோதும், அவற்றில் பீடைத்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பயிர்களில் ஏற்படும் பீடைத்தாக்கங்கள் பற்றியும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் இன்றைய 'கமமும் புலமும்' பகுதியில் பார்ப்போம்.

### நெல் சந்துகுத்தி

இப்பீடையில் பல பேதங்கள் உள்ள போதிலும், இலங்கையில் மஞ்சள் சந்துகுத்தியின் தாக்கமே அதிகமாக காணப்படுகின்றது. இதன் நிறைவுடலியானது மஞ்சள் நிறமான அந்து ஆகும். இவற்றின் இறகுகளில் கறுப்புப்புள்ளிகள் காணப்படும். இந்த அந்துகள் இரவு நேரங்களிலேயே தொழிற்படுகின்றன.

ஒரு பெண் அந்து 200 முதல் 300 வரையிலான முட்டைகளை இடும் ஆற்றல் கொண்டது. இதனால், இப்பீடைத் தாக்கம் வேகமாகப் பரவலடையும். இது நெற் பயிரின் வளர்ச்சிக்காலத்திலும் கதிர் தோற்றுவிக்கப்பட்டு பால் அடைகின்ற காலங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. வளர்ச்சி நிலைகளில் அதாவது, மட்டத் தோற்றுவிப்புக் காலத்தில் இத்தாக்கம் இருப்பின் பாதிக்கப்பட்ட மட்டத்தின் கடைசி இலை கபில நிறமானதாக மாற்றமடையும். இதற்கான காரணம் என்னவெனில், முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் மட்டத்தின் வளர்ச்சி முறை இருக்கும் பகுதியினுட் சென்று அப்பகுதியை உணவாக உட்கொள்வதேயாகும். இத்தாக்கத்தைத் தகுந்த நேரத்தில் கண்டு பிடித்துக் கட்டுப்படுத்தினால் விளைவில் பெரிய அளவில் இழப்பு ஏற்படாது தடுக்கலாம்.

இப்புழுக்களின் கதிர் உருவாக்கத்திற்குப் பின்னான தாக்கமானது விளைவில் அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதொன்றாகும். இந்நிலையில், ஏற்படும் புழுவின் தாக்கம் காரணமாக நெற்கதிரைத் தாங்குகின்ற மடலின் அடிப்பகுதியானது பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. இதன் காரணமாகக் கதிர் முழுமையாக வெண்ணிறமானதாக மாறிக் காய்வடைகின்றது. இது வெள்ளைக்கதிர் என விவசாயிகளால அழைக்கப்படுகின்றது. இப்படியான கதிர்களை மேல்நோக்கி இழுக்கும் போது அவை மிகச் சுலபமாகப் பயிரில் இருந்து விடுவிக்கப்படும். இவற்றின் தண்டு மடல்களைக் கிழித்துப் பார்க்கும் போது நடுப்பகுதியில் புழுவை அவதானிக்க முடியும்.

### கட்டுப்பாடு

மேற்குறித்த தோற்றப்பாடுடைய நிறைவுடலிகளின் நடமாட்டம் வயல்களில் இருக்கும்போது அவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இப்பீடைத் தாக்கத்தைக் குறைக்கலாம். இந்நிறைவுடலிப் பருவமானது ஒளியினால் அதிகளவில் கவரப்படக் கூடியதொன்றாகும். எனவே, இரவுவேளைகளில் வயற்பகுதியில் ஆங்காங்கே தீ மூட்டுவதன் மூலம் பரவலாக இருக்கும் நிறைவுடலிகளை ஓரிடத்தில் குவியச் செய்யலாம். இவை அடுத்தநாள் காலை தீ மூட்டப்பட்ட பிரதேசத்தைச் சுற்றிக் குவிந்து காணப்படும். இந்நிலைகளில் அவற்றின் மீது பூச்சிநாசினிகளைத் தெளிப்பதன் மூலம் மிகக் குறைந்த செலவில் அதிக பலனைப் பெறமுடியும்.

இப்பீடையின் தாக்கத்தை ஏற்படுத்தும் பருவமான புழுவானது பயிரின் தண்டினுள் இருந்தே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, நாம் தெளிக்கும் பூச்சிகொல்லிகள் நேரடியாகப் பீடைமீது படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை எனவே, இந்நிலைமைகளில் தொடுகைமுறைப் பீடைநாசினிகளைப் பயன்படுத்துவது பிரயோசனமற்ற செயலாகும். இவற்றிற்குத் தொகுதிப் பீடைநாசினிகளை அதாவது தாவரத்தால் அகத்துறிஞ்சப்பட்டு தாவர உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் அவற்றின் உடற்தொழிலியல் செயற்பாடுகளினால் கடத்தப்படக்கூடிய நாசினிகளையே பயன்படுத்த வேண்டும். இச்சந்தர்ப்பத்திலேயே பீடை தாவரத்தின் எப்பகுதியில் இருந்தாலும் அப்பகுதியை உணவாக உட்கொள்ளும்போது இறக்க நேரிடும். இப்பீடையைக் கட்டுப்படுத்துவதற்குப் பின்வரும் இரசாயனங்களைப் பயன்படுத்தலாம். அவையாவன:-

கொமாண்டோ, சைறன், விற்றாசில்ட், மார்சல், பியூரடான். இவற்றில் பியூரடான் குறுனல்களை கதிர் வெளித்தள்ளப்படுவதற்குச் சற்று முன்னராக ஒரு ஏக்கருக்கு 8 கிலோ என்ற வீதத்தில் விசிறி விடுவதன் மூலம் பயிரை நீண்ட நாள்களுக்கு இப்பீடைத்தாக்கத்தில் இருந்து பாதுகாக்கலாம். இவற்றை விசிறும் போது நிலமானது நீர்த்தேக்கமற்று நன்கு ஈரலிப்பானதாக மட்டும் இருத்தல் விரும்பத்தக்கது.

### இலை மடிச்சுக்கட்சி

பொதுவாக இப்பீடையானது நெற்பயிரின் பல்வேறு வளர்ச்சி நிலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொன்றாகும். இதன் நிறைவுடலி கபில நிறமான சிறிய வண்ணத்துப்பூச்சியுருவான அந்து ஆகும். இது விருத்தியடைந்து வெளிவந்த அன்றே இலை மேற்பரப்பில் முட்டையிட ஆரம்பிக்கும். பெண் அந்து ஒன்று ஒரு தடவையில் 300 முட்டைகள் வரையில் இடும் ஆற்றல் கொண்டது. முட்டை இடப்பட்டதில் இருந்து 3 - 5 நாள்களில் முட்டை பொரித்து குடம்பி வெளிவரும். இது இளம் இலைகளை உறிஞ்சி உணவாக உட்கொள்ளும். இதிலிருந்து சில நாள்களில் இலையைச் சுருட்டி அதனுள் இருந்து உணவைப்பெறும். இதனால், இலைப்பரப்பில் நீள்பக்கவாட்டில் பச்சையம் அகற்றப்பட்ட பகுதிகள் ஒளியைப் புகவிடக்கூடிய கோடுகளாகக் காணப்படும்.

### கட்டுப்பாடு

இப்பீடைத்தாக்கம் உள்ள வயல்களில் சில சந்தர்ப்பங்களில் சிலந்தி வலைகள் இருப்பதை அவதானிக்க முடியும் சிலந்திகள் இப்பீடையை உணவாக உட்கொள்வதனால் அங்கு ஓர் இயற்கையான கட்டுப்பாடு நடைபெறுகின்றது. அச்சந்தர்ப்பங்களில் பீடைநாசினி பயன்படுத்தினால் சிலந்திகள கொல்லப்படும். ஆனால், சிலந்திகளின் கட்டுப்பாட்டை மீறிய பீடைத்தாக்கம் இருப்பின் பீடைநாசினி தெளிக்க வேண்டியது அத்தியாவசியமான தேவையாகும். இதனை விவசாயிகள் தமது அவதானிப்புக்கள் மூலம் தீர்மானித்துக்கொள்ளலாம். இப்பீடையும் மடித்துக் கட்டப்பட்ட இலையினுள் இருந்து தாக்கத்தை ஏற்படுத்துவதால் தொகுதிப் பூச்சி கொல்லிகளைப் பாவிப்பதன்மூலமே கட்டுப்படுத்த முடியும். இப்பீடைத்தாக்கத்தைப் பின்வரும் பூச்சிநாசினிகளைப் பாவிப்பதன் மூலம் கட்டுப்படுத்தமுடியும். அவையாவன:- றீஜென்ற், லோஸ்பான், விற்றாசில்ட், சைறன்.

இவைதவிர வயலினுள் ஆங்காங்கே கிளைகொண்ட தடிகளை நட்டு விடுவதன்மூலம் கரிக்குருவி, செண்பகம் போன்ற இன்னும் பல பூச்சிபுழுக்களை உண்ணும் - விவசாயிகளுக்கு நன்மை பயக்கக் கூடிய பறவைகளுக்கு இருப்பிடத்தை வழங்கமுடியும். இது நடமாட்டத்தை அவதானித்து அவற்றைப் பிடித்து உண்ணுவதற்கு வழிவகுக்கும்.

### கபிலநிறத்தத்தி

இவை கபிலநிறமான சிறிய தத்தி இனமாகும். இத்தத்திகள் தண்டின் அடிப்பகுதியில் நீரமட்டத்தோடு கூட்டம் கூட்டமாகத் தென்படும் அத்துடன் வேகமாக அங்கும் இங்கும் தத்தித்திரியும் ஆற்றலும் கொண்டவை. நிறைவுடலி சூலிடைப்படுத்தியின் மூலம் பயிரின் இலைமடல்களில் அல்லது இலைத் தண்டுப்பகுதியினுள் குத்தி அதனுள் முட்டையிடும். 6-7 நாள்களில் இம் முட்டைகள் பொரித்து அணங்குகள் வெளிவரும். முதிர்ந்த தத்தி நீண்ட இறகு உள்ளதாகவும், தாமாகவே பறந்து வேறு வயல்களிற்குச் செல்லக் கூடியவையாகவும் இருக்கும். பெண் தத்தி ஒன்று ஒரு தடவையில் 100 முதல் 300 வரையிலான முட்டைகள் இடுவதால் மிகவேகமாகப் பரவுகின்றன.

நெற்பயிரின் அடிப்பாகத்தைப் பற்றிப்பிடித்தவண்ணம் இருக்கும் இத்தத்திகள், தண்டில் இருந்து சாற்றை உறிஞ்சுகின்றன. இதன் காரணமாகத தத்திக்கூட்டம் இருந்த வயலின் பகுதிகளில் உள்ள பயிர்கள் வட்டம் வட்டமாக எிவடைந்து வைக்கோல் போன்று தோற்றமளிக்கும். இது தத்திஎரிவு எனப்படும். இத்தத்திகளின் பெருக்கமானது மிகவும் விரைவான தொன்றாக இருப்பதனால் ஒரு நாளில் சிறு வட்டமாக இருந்த தத்தித்தாக்கம் மறுநாளில் பெரியவட்டமான எரிவாக விரிவடையும். நெற்பயிரைப் பொறுத்தமட்டில் தத்தித்தாக்கம் அதன் விளைவில் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

எனவே, நெல்வயல்களில் தத்தித்தாக்கம் அவதானிக்கப்பட்டால் உடனடியாகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்தல் அவசியமானதொன்றாகும். இதுமட்டுமல்லாமல் அயற்பிரதேசங்களில் தத்தித்தாக்கம் இருப்பதை அவதானித்தாலே விவசாயிகள் விழிப்படைந்து தமது வயல்களையும் அடிக்கடி கண்காணிப்பதன் மூலம் ஆரம்ப நிலையிலேயே தொற்றைக் கண்டறிந்து கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

### கட்டுப்பாடு

அதிக நெருக்கமாகப் பயிர்கள் உள்ள வயல்களில் தத்தித்தொற்று ஏற்பட்டால் அதன் பரவலும் தாக்கமும் அதிகமாக இருக்கும். எனவே, நெல் விதைக்கும் போதே குறிப்பிடத்தக்க இடைத்தூரத்தில் பயிர்கள் இருக்கத்தக்கவாறு விதைப்பினை மேற்கொள்வது விரும்பத்தக்கது.

இலங்கையில் பத்தலகொட நெல ஆராய்ச்சிநிலையத்தில் உருவாக்கப்பட்ட சில நெல்லினங்களான Bg 379 - 2, Bg 300, Bg 304, Bg 352 போன்றவை கபிலநிறத் தத்தித்தாக்கத்துக்கு எதிர்ப்புத்தன்மை கொண்டவையாகும். இந்த இனங்களைச் செய்கை பண்ணுவதன் மூலமும் இவற்றின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் இவைதவிர, பின்வரும் பூச்சி நாசினிகளைத் தெளிப்பதன் மூலமும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும் அவையாவன விபிஎம்சி. (V.P.M.C), மார்சல், அட்மயர், றிஜென்ற், அப்லோட்.

"அப்லோட்" ஆனது கபிலநிறத்தத்திகளின் எல்லா வளர்ச்சி நிலைகளையும் தாக்கவல்லது. அதாவது, முட்டைகள் பொரிப்பதைத் தடைசெய்கிறது அல்லது மலடாக்குகிறது. குடம்பி கூட்டுப்புழுவாக மாறுவதைத் தடை செய்கிறது. அணங்கு நிறைவுடலியாக மாறுவதைத் தடைசெய்கிறது. இச் செயற்பாடுகளின் மூலம். நீண்ட நாள்களுக்குப் பயிரைக் கபிலநிறத்தத்தியில் இருந்து பாதுகாக்கின்றது.

தத்திகள் குறிப்பாகத் தண்டின் அடிப்பாகத்தில் இருப்பதால் தெளிக்கப்படும் பூச்சி நாசினியானது தண்டின அடிப்பாகத்தைச் சென்றடையக் கூடியதாக இருத்தல் மிக அவசியமாகும். இதற்காக, வயல்களில் சால்கள் பிரிக்கப்பட்டு பூச்சி நாசினிகளைத் தெளித்தல விரும்பத்தக்கது. பூச்சி நாசினி தெளிக்கப்பட்டபின்னர் வயலில் உள்ள நீரினை வெட்டி அகற்றுதல் வேண்டும். இதன் மூலம் மயக்கநிலையில் நீரின்மேல் விழுந்து மிதக்கும் தத்திகளை வயலில இருந்து வெளியகற்ற முடியும்.

### நெல் எரிபந்தம்

பிரிக்குலேரியா ஒறைசே எனப்படும் பங்கசே இந்த எரிபந்த நோய்க்குரிய நோய்க்காரணியாகும். இது நெற்பயிரின எவ்வளர்ச்சிப்பருவத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. இந்நோயின் தாக்கத்துக்குள்ளான பயிர்களின் இலைகள், தண்டுக்கணுக்கள், கதிரின் பகுதிகளான கதிரின் கழுத்துப்பகுதி, நெல்மணிகள் என்பவற்றில் புள்ளிகள தோற்றுவிக்கப்படும் இப்பங்கசுவினால் ஏற்படுத்தப்படும் புள்ளிகளின் நடுப்பகுதி பருத்தும் இரு நுனிப் பகுதிகளும் ஒடுங்கியும் கதிர்வடிவாகக் காணப்படும். அதேநேரம். புள்ளிகளின் மத்திய பகுதியில் இப்பங்கசுவின் வித்திகள் சாம்பல் நிறமாகக் காணப்படும்.

நெற்பயிரைத் தாக்குகின்ற நோய்களுள் அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடிய நோய் இதுவாகும். இந்நோய் தண்டின் கணுக்களைத் தாக்கும்போது அவ்விடம் கறுப்பு நிறமாக மாறி அவ்விடத்தில் தண்டு முறிவடையும். கதிரின் கழுத்துப் பகுதியில் தாக்கம் ஏற்பட்டால் அப்பகுதி கறுப்பு நிறமடைந்து உடையும். இது கழுத்து எரிபந்தம் என அழைக்கப்படும். நெற்கதிரின் இளம் பருவத்தில் கழுத்து எரிபந்தம் ஏற்பட்டால் வெற்றுக் கதிர்கள் உருவாக்கப்படும். முதிர்ந்த நிலையில் ஏற்பட்டால் கழுத்துப் பகுதியுடன் முறிவடைந்து வயலில் சிந்திப் பிரயோசனமற்றுப்போகும்.

இப்பங்கசு வித்திகள் காற்றினாலேயே பரவலடைகின்றன. பொருத்தமான காலநிலை காணப்படும் இடத்து பயிரின் மேற்புறத்தில் விழும் வித்திகள் முளைத்து நோயை ஏற்படுத்துகின்றன. கூடிய சாரீரப்பதன், மந்தமான காலநிலை, மழை அல்லது பனி போன்றன இந்நோய் இலகுவில் பரவுவதற்கான புறக்காரணிகளாகும். இவை தவிர, அதிகரித்த நைதரசன் வளமாக்கிப் பிரயோகமும் இந்நோய் பயிரைத் தாக்குவதை இலகுவாக்குகிறது. அதே நேரம் அதிகரித்த பொட்டாசியம் வளமாக்கிப் பிரயோகம் பயிருக்கு இந்நோயை எதிர்ப்பதற்கான சக்தியை வழங்குகின்றது என்ற கருதுகோளும் விவசாயிகளிடையே காணப்படுகின்றது.

### கட்டுப்பாடு

நெல்லினங்களான Bw 352, Bw 100, Bw 78, At 303 போன்றவை எரிபந்த நோய்த் தொற்றுக்கு எதிர்ப்புத்தன்மை கொண்டவையாக இருப்பதனால் இவ்வினங்களைப் பயிரிடுவதன் மூலம் இந்நோய்த் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். நெல்லினமான Bg 34-6 ஆனது இலங்கையில் உள்ள நெல்லினங்களில் மிக இலகுவாக எிபந்த நோயினால் தாக்கப்படக் கூடிய ஓர் இனமென இனங்காணப்பட்டுள்ளது. பியூ. ஜி.ஒன். ஹினோசான், ககமின், பென்லெட் போன்றவை இந்நோயைக் கட்டுப்படுத்தவல்ல பங்கசு நாசினிகளாகும்.

### சடைக்கட்டை நோய்

இந்நோயின் நோய்க்காரணி வைரசுவாக இருப்பதனால் இதனை நேரடியாகக் கட்டுப்படுத்துவதற்கு எதுவிதமான நாசினிகளும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், இந்நோயின் நோய்க்காவியாக கபில நிறத் தத்திகள் காணப்படுவதால் அவற்றினை ஆரம்பத் தொற்றல் நிலையில கட்டுப்படுத்துகின்ற எல்லாச் செயல் முறைகளும் இந்நோயின் தோற்றலுக்கான சந்தர்ப்பத்தைக் குறைக்கும்.

ஈரவலயப் பிரதேசங்களில் இந்நோயால் பாதிக்கப்பட்ட வயல்களில் அறுவடை செய்யப்பட்ட அடிக்கட்டைகளில இருந்து தோற்றுவிக்கப்படும் பயிர்கள், அதனைத் தொடர்ந்துவரும் செய்கைக் கலாத்துக்கு இந்நோயைக் கடத்துவதில் அதிக பங்கு வகிக்கின்றன. எனவே, அறுவடையின்பின் உடனடியாக இக்கட்டைகளை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

பூச்சி நாசினிகள், பங்கசு நாசினிகள் என்பவற்றைப் பயன்படுத்தும் போது கலவை அளவுகளை போத்தல்களில் உள்ள அறிவுறுத்தல்களின்படி பின்பற்றுதல் அவசியமாகும். அத்துடன். பீடைநாசினிகளை குறிப்பாகப் பனிகாலங்களில் காலை வேளைகளில் தெளிப்பது விரும்பத்தக்க ஒன்றாகும். ஏனெனில், இலைகளில் பனித்துளிகள் காணப்படுவதால் அவை தெளிக்கப்படும் நாசினிகளின் செறிவைக் குறைத்துவிடும்.

நெற்பயிரின் பூத்தல் காலங்களில் அதாவது, கதிர்தோற்றுவிக்கப்பட்டுப் பால் அடைவதற்கிடையிலான காலப் பகுதியில் மதியவேளைகளில் நாசினிகளைத் தெளித்தல் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும் ஏனெனில் காலை 10 மணி அளவிலேயே நெல் பூக்க ஆரம்பிக்கின்றது. இதன்போது நெல் உமிகள் திறக்கப்படும். இது மாலை 3 மணிவரை திறந்து காணப்படும். எனவே, இக்காலப்பகுதியில் நாசினிகள தெளிக்கப்பட்டால் அவை கருக்கட்டல் நிகழ்வைத் தடுக்கும் அல்லது கருக்கட்டப்பட்ட பூக்களில் கருக்கலை ஏற்படுத்தும் இதனால், அதிக நிரம்பலடையாத நெல்மணிகள் தோற்றுவிக்கப்பட்டு விளைவில் குறைவு ஏற்படும். இந்நிலைமைகளில் காலை 10 மணிக்கு முன்னரும், மாலை 3 மணிக்குப் பின்னரும் பீடைநாசினிகளைத் தெளிக்கலாம்.



செ.சத்தியசீலன்
வெளிக்கள உதவியாளர்
யு.என்.எச்.சி.ஆர்.

# தகவல் தொழில்நுட்பக் கல்வியில்...
# முன்னணி வகிக்கும் NIIT!

கணனிக் கல்வியறிவு ஊட்டுவதில் அனைத்துலக முன்னோடியாக விளங்குவது இந்தியாவின் NIIT நிறுவனம். உலகக் கணனிக கல்வியறிவு தினத்தை அறிமுகப்படுத்தியதும் அதுவே. உலகக் கணனி கல்வியறிவு தினத்தை முன்னிறுத்தி அடுத்த ஆண்டில் கணனிக் கல்வியறிவுத் துறையில் புதிய பரிமாணமும் உச்ச நிலையும் எய்தப்படும். இந்த வருடத்தில் அனைத்துலகிலும் உள்ள தனது 3,800 கல்வி நிலையங்கள் ஊடாக, 2,00,000 மக்களுக்குக் கணனித்துறையில் பயிற்சி வழங்குவதற்கு NIIT திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் அடுத்த இரண்டு மாதங்களில் மட்டும் சுமார் 5000 மக்கள் கணனி உலகத்திற்குள் முதல் அடி எடுத்து வைப்பதற்கு NIIT உதவ உள்ளது. ஏன் தகவல் தொழில் நுட்பத்துறைக்குள் ஏற்கனவே நுழைந்தவர்களுக்கும் NIITயின் புதுமையான திட்டத்தில் பல பயிற்சிகள் காத்திருக்கின்றன. மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், தொழில் புரியும் துறைசார் பணியாளர்கள், அரசாங்க அலுவலர்கள் ஆகியோர் கணனிகளுடன் பழக்கமும் பரிச்சயமும் உடையோராவதுடன் மட்டுமன்றி அதிசயிக்கவைக்கும் பன்முக ஊடக உலகத்துக்குள் நுழையும் வாய்ப்பையும் பெறுவர்.

NIIT ஓர் அனைத்துலகத் தகவல் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனம். அது கணனிக் கல்வி அறிவு மென்பொருள் மற்றும் அவைதொடர்பான தீர்வுகளை ஐரோப்பா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆகிய பகுபிக் நாடுகளில் வழங்கிவருகிறது. அந்த வகையில் மொத்தம் 44 நாடுகளில் அது அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

இந்தியாவில் மட்டும் ஐந்து மாநிலங்களில் உள்ள 2000இற்கும் அதிகமான அரச பாடசாலைகளில் ஆண்டுதோறும் பத்து லட்சம் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்துறைப் பாடங்களில் NIIT பயிற்சி அளித்து வருகிறது.

அனைத்துலகத்திலும் தொழில்நுட்பப் பயிற்சித்துறையில் உயர்நிலை வகிக்கும் 15 முதன்மை நிறுவனங்களில் NIIT கூட்டுத்தாபனமும் 2000, 2001ஆம் ஆண்டுகளில் சிறப்புச் செய்யப்பட்டது. அத்தகு பெருமையை ஆசியாவில் முதன் முறையாகப் பெற்ற ஒரேயொரு நிறுவனம் NIITயே ஆகும்.

NIIT இலங்கையில் தனது முதலாவது கணனிக் கல்வி நிலையத்தை 1997ஆம் ஆண்டில் நிறுவியது. அதன் சேவைக்கு மாணவர்களிடம் இருந்து அமோக ஆதரவு கிடைத்தது. அதன் விளைவாக மாணவர்களுக்கு நெருக்கமாகவும் அவர்களுக்கு அருகேயும் செல்லும் நோக்குடன் கொழும்பில் யூனியன் பிளேஸ், பம்பலப்பிட்டி, நுகேகொட ஆகிய இடங்களிலும் கம்பஹா, யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல், திருகோணமலை ஆகிய இடங்களிலும் கணனிக் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன.

NIITயின் பயிற்சித் திட்டங்கள் இருவார குறுகிய கால தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவுப் பாடநெறி முதல் கணனிப பொறியியல் 2வருட சிறப்பு டிப்ளோமா பாடநெறிவரை விசாலமானவை. அவற்றுடன் நின்றுவிடாது தகவல் தொழில்நுட்பத் துறைசார் வல்லுநர்களுக்கான உயர்தரப் பாடநெறிகளும் புகட்டப்படுகின்றன.

NIIT இலங்கையில் சுமார் 10,000 மாணவர்களுக்கு கணனிப் பயிற்சிநெறிகளைப் புகட்டியதோடு, விமான நிலையம், விமானப் போக்குவரத்து சேவைகள், டயலொக் ஜி.எஸ்.எம், ஹேமாஸ் குறூப், MAS குறூப், மக்கள் வங்கி, இலங்கைப் பொலீஸ், ஸ்ரீலங்கா ரெலிகொம், சன்ரெல், ஹற்றன் நஷனல் வங்கி ஆகியன உட்பட பல நிறுவனங்களின் பணியாளர்களுக்கும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகளை அளித்துள்ளது.

இந்தச் சேவைக்கு மகுடம் சூட்டியதுபோல, இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற NIITயின் அனைத்துலக கணனிக் கல்விதினம் - 2003இற்கும் இலங்கையின் பிரதம அமைச்சர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க பேராதரவு நல்கினார். பிரதமரின் மனமுவந்த ஆதரவு இந்நாட்டின் கணனிக் கல்வியறிவு வளர்ச்சிக்கு பெரும் உந்துதலாக அமைந்துள்ளது.

மாண்புமிகு பிரதம அமைச்சர், மென்துரித முதலடி பதிக்கும் கற்கைநெறித் திட்டத்திற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நூல்களை வெளியிட்டு வைத்தார். அதனோடு உலகளாவி வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள், கணனி உலகத்திற்குள் நுழைவதற்கு ஊக்கமளித்துள்ளார். இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் Sri Lanka திட்டத்துக்கு ஆதரவளிக்கும் முகமாக இலங்கைப்பிரஜைகள் 500பேருக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்க NIIT உறுதி அளித்துள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற ஆடம்பரமற்ற நிகழ்வு ஒன்றில்வைத்து பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை அமைச்சர் மாண்புமிகு மிலிந்த மொறகொடவும் கணனிக் கல்வியறிவு ஊட்டலுக்கு ஆதரவு நல்குவதற்கு உறுதி அளித்துள்ளார். சமூகத்தின் சகல தரப்பினர்கள் மத்தியிலும் கணனிக் கல்வியறிவைப் பரப்புவ தன் மூலம் மக்களையும் கணனிகளையும் நெருக்க முறச் செய்யும் புத்தூக்கமும் தரும் இந்தத் திட்டத்திற்கு இந்திய பிரதித் தூதுவர் திரு.மோகன்குமாரும் தமது ஆதரவைத் தெரிவித்தார்.


உலகத்தை உலுப்பும் தொழில்நுட்பப் புரட்சி ஒவ்வொரு பிரஜையினதும் வாழ்க்கையையும் மாற்றமுறச் செய்கிறது. இலங்கையைச் சேர்ந்த அருகதையுள்ள மணவர்களை கணனிக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகள் அற்ற மாணவர்களை, புதிதாக மேலுயரும் ஒளிமயமான எதிர்காலத்திற்குள் ஓரணியாக அழைத்துச் செல்வதற்கு எம்மை அர்ப்பணிக்கிறோம் - என்று NIITயின் இயக்குநரும் பிரதம அதிகாரியுமான திரு.இராஜேந்திரன் உலகக் கணனிக் கல்வியறிவு தின நிகழ்ச்சியில் கூறினார்.

கணனிக் கல்வி அறியாமைக்கு எதிரான போரின் ஒரு பெரிய முன்னேற்றப்படியாக NIITயின் அனைத்துலகக் கணனிக் கல்வியறிவு தின இயக்கம் அமைந்துள்ளது. இலங்கையை கணனிக் கல்வியறிவு நிறைந்த நாடாக உருவாக்குவதற்கு நாம் உறுதி எடுக்கின்றோம். இதனை நிறைவேற்ற சமூகத்தின் சகல பிரிவினரதும் ஆதரவைக் கோருகின்றோம் - என்றும் திரு.இராஜேந்திரன் கேட்டுக்கொண்டார்.



**கொழும்பில் நடைபெற்ற உலகக் கணனிக் கல்வி தினம்-2003 நிகழ்வுகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படத்தில் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட, NIIT நிறுவன இயக் குனரும் பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான பி.ராஜேந்திரன், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் மோகன்குமார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.**




**Dip. In Business Applications (MS OFFICE)**
Free Study Pack
4 DURATION MONTHS
Fee 2,500/=

**Dip. In Digital Science (Information Technology)**
8 DURATION MONTHS
Fee 4,500/=

**Dip. In Desktop Publishing**
Free Study Pack
5 DURATION MONTHS
Fee 3,500/=

**Dip. In KIDS Programme**
O/L மாணவர்களுக்கானது
Course Fee 1,000/=

**Dip. In Hardware**
3 DURATION MONTHS
Fee 3,500/=

(C/32021) UTHAYAN Graphics

**Higher Dip. In Software Engineering (Full Language Course)**
12 DURATION MONTHS
Fee 5,500/=

**Dip. In English (By: S.Pathmanathan)**
5 DURATION MONTHS
Fee 1,500/=

**CERTIFICATES**

| | |
|---|---|
| MS Word | 1,000.00 |
| MS Excel | 1,000.00 |
| MS Access | 1,000.00 |
| Page Maker | 1,500.00 |
| Photo Shop | 1,500.00 |
| Visual Basic | 2,000.00 |
| Pascal | 1,500.00 |
| Java | 3,500.00 |
| C++ | 1,500.00 |
| Hard Ware | 2,000.00 |

# INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

*HEAD OFFICE:*
250, Stanley Road, Jaffna.
Tel : 021-222-3165

*BRANCHES:*
N.M.V. Road, Nelliyady,
Chankaththanai, Chavakachcheri.

Member • Association of Computer Training Organisations • ACTOS

கற்கைநெறிக் கட்டணம் எமது கிளைகளுக்கு பொருந்தாது.
எமது சாவகச்சேரி கிளையிலும்
Dip. In
DESKTOP PUBLISHING
கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

# The Barbara Mulvaney


## Computer Training Centre

பாபறா மல்வானி கணனி பயிற்சி நிறுவனமானது ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் 1999ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் குறிப்பாக பெண்களுக்கான அடிப்படைக் கணனி அறிவினை மேம்படுத்தும் பொருட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந் நிறுவனமானது கடந்த நான்கு வருடங்களாக் தொடர்ந்தும் ஐ.நா.வின் அனுசரணையுடனும் மேற்பார்வையுடனும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்பொழுது அனைத்துத் தரப்பினரும் இங்கு கணனிப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாகப் பாடசாலை மாணவரின் நலன் கருதி வார இறுதி நாட்களிலும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் விசேட கணனி வகுப்புக்கள் நடை பெறுவதுடன், அலுவலக உத்தியோகஸ்தருக்கான குறுகிய கால துரிதப் பயிற்சி வகுப்புக்களும் நடை பெற்று வருகின்றன. இதில் அரச ஊழியர்களும் அரச சார்பற்ற ஊழியர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.



இவ்வருடம் எமது நிறுவனம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக, அதி வேகமாக இணையத் தொடர்பினைப் பெறக்கூடிய Leased Line தொழில் நுட்பத்தின் மூலம் சகல கணனிகளும் இணைய மயமாக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் சகல தரப்பினரும் தற்பொழுது இணைய வசதியைப் பெற்று வருகின்றனர். அத்துடன் Internet, E-Mail பாட நெறிகளுக்கான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் சிறுவர்கள் முதல் அலுவலக உத்தியோகத்தர் வரை அவர்களது தேவைக்கேற்ப பல்வேறுபட்ட பிரிவுகளாக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப் பயிற்சி வகுப்புக்கள் யாவும் செய்முறை ரீதியாக நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



### சர்வதேச அங்கீகாரம் பெற்ற புதிய கற்கை நெறி

Cisco Systems Networking Academy

சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற CISCO Net working Accademy இன் Net Work பாட நெறியானது யாழ் குடா நாட்டில் முதன் முறையாக எமது நிறுவனத்தில் புதுவருடத்தையொட்டி ஆரம்பிக்கப்பட வுள்ளது.

CISCO Net Working Accademy ஆனது முதன் முதலில் 1997ம் ஆண்டு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது உலகளாவிய ரீதியில் 149 நாடுகளும் ஆசியாவில் 24 நாடுகளும் இதில் இணைந்துள்ளன. குறிப்பாக இலங்கையில் இரண்டு நிறுவனங்களே இதில் இணைந்துள்ளன. இதில் ஒரு நிறுவனம் தலைநகரிலும் (SLIIT) மற்றையது யாழ் மண்ணிலுள்ள எமது நிறுவனமும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.




உலகளாவிய ரீதியில் கூடிய தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரக்கூடிய இக் கற்கை நெறியானது கடந்த காலங்களாக வெளி நாடுகளிலேயே பயிலக் கூடியதாக இருந்தது. ஐ.நா.வின் அனுசரணையால் குறைந்த கட்டணத்தில் யாழ் மாணவர்கள் இக் கல்வியை எமது நிறுவனத்தினூடாக கற்கக் கூடியதாக உள்ளமை எமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

வெளி நாடுகளில் வேலை தேடிச் செல்லும் மாணவர்களுக்கும், Net Work பற்றிய பூரண அறிவை பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கும் இப் பாடத்திட்டம் பெரிதும் பயனுடையதாக இருக்கும். இப் பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்வதன் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெற முடியும்.

இப் பயிற்சி நெறிபற்றிய விரிவான கருத்தரங்கொன்று எமது நிறுவனத்தில் வெகு விரைவில் நடாத்தப்படவுள்ளது.

123, Temple Road, Jaffna

T.P. No. :021 222 5971

# நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பொழுது ஓரளவு சரளமாக

## ஆங்கிலம் பேசுகின்றார்கள் !!!

எமது கற்பித்தல் முறை மூலம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

### G.G.E (O/L) முடித்த மாணவர்களுக்கு

G.G.E (O/L) முடித்த மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் திறனை வளர்க்க விசேட English Oral Communication வகுப்புக்கள் December / January ஆரம்பம்.

### சிறார்களுக்கான ஆங்கில வகுப்புகள்

December/January புதிய பிரிவுகள் ஆரம்பம்.

- Foundation
- Lower Intermediate
- Intermediate
- Upper Intermediate

### பாலர் பாடசாலை

**January 2004 Admision**

சர்வதேச தரத்திற்கு ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

- Play Group (2+ குழந்தைகளுக்கு )
- Montessori (3+ குழந்தைகளுக்கு )
- Pre-School (4+ குழந்தைகளுக்கு )

தமிழ்மொழி ஒரு கட்டாய பாடமாக கற்பிக்கப்படுகின்றது.
அனுமதிக்கு முந்துங்கள்.

### சிறார்களுக்கான கணனி வகுப்புகள்

புதிய பிரிவுகள் December / January ஆரம்பம்.

- தனிப்பட்ட கவனம்.
- ஆங்கிலத்திலும் கற்பிக்கப்படும்.

விசேட சலுகை

MS Office Rs. 1500/= Only

### கணனி வகுப்புகள்

ஆங்கில மொழி மூலம் தமிழ் விளக்கங்களுடன் கணனி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. G.G.E (O/L) முடித்த மாணவர்களுக்கு விசேட சலுகை.

MS Office Rs. 2500/= Only

வளர்ந்தோருக்கான விசேட ஆங்கில வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.
மகளிருக்கு மட்டும் தேவைப்படின் பிரத்தியேக வகுப்புகள் ஒழுங்குபடுத்தலாம்.

Certificate in English | Diploma in English

வளர்ந்தோருக்கான ஆங்கில பாடநெறி.

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

| யாழ்ப்பாணம் | வடமராட்சி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 14D, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கிராமக்கோட்டடி, புலோலி. | 174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். |

TELEPHONE : 021-2225796